

அருள்மிகு கந்தஞானியாரின்

# சீவிய சரித்திரம்

10.01.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு கந்தஞானியாரின்
# சீவிய சரித்திரம்



எழுதியவர்
அமரர் திரு.ச. விசுவநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்கவி சீ. வினாசித்தம்பி

அவர்கள் வழங்கிய ஆசியுரை

தானமும் தவமுமோங்கத தந்தனன் கந்தஞானி

பொன்னுயர் அராலியூரில் பொருளுவர் குலத்தில் தோன்றி
தன்நெறி பிடித்தாந்த ஞானியார் என்னும் செல்வன்
முன்னிய பவங்கள் நீக்கும் முக்கண்ணன் சிவனை எண்ணி
மன்னிய கோயில் செய்தான் மக்களின் நலனுக்காக

தன்னையே உணர்ந்து தேவ தத்துவ விளக்கை நெஞ்சில்
பின்னமில் லாமலேற்றிப் பிரணவ சோதிகண்டு
மின்னெறி சடையான்பாதம் விளங்கிடும் லிங்கபூசை
உன்னிய பணியாய்க் கொண்டாய் உத்தமன் கந்த ஞானி

ஞானத்தின் விளைவுகண்டு தலம்தரு சித்திகண்டான்
மோனத்தின் சுழுமுனைக்குள் முனைந்தெழும் சிவனை இந்தத்
தானத்தில் இருக்கச் செய்து தவந்தரு கோயிலாக்கித்
தானமும் தவமுமோங்கத் தந்தனன் கந்தஞானி

தண்ணினர்க் கினிய கந்த ஞானியார் கோயிலென்னும்
வண்ணமிக கெழுந்த கோயில் வந்தனை செய்வோர்க் கெல்லாம்
தண்ணரும் புரிந்து வேண்டத் தருவரம் உதவி மேனை
விண்ணவர் வந்து போற்றும் வியன்மணித் தவமாய்த் கண்டோம்

கோயிலும் கோயில்னைந்த குலமணி கந்த ஞானி
சேயெனும் செல்வனாரும் செய்திட்ட பணியை அன்னான்
தூயனன் மரபில் வந்தோன், சோதியாய் வானம் புக்கோன்
நேயனாம் விசுவநாதர் நிகழ்த்தினார் வரலாறாக.

அன்பனாம் விசுவநாத ஆசிரியப் பேராளன்
பொன் பெறு கையெழுத்தில் பொருத்திய இந்நூல் கற்போர்
இன்ப நல் வாழ்வு பொங்கி இறைவன் திருத்தாள் கண்டு
முன்புறு பவங்கள் நீங்கி முத்தராய் வாழு வாரே.

சுபம்

அருட்கவி

**சீ.வினாசித்தம்பி புலவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருள்மிகு அராலி மேற்கு கந்தஞானியாரின்
## சீவிய சரித்திரம் மலரின்
## இரண்டாம் பதிப்புக்கு ஆசிரியர்
## அராலியூர் கணேச மங்கள மூர்த்தி அவர்கள்
## வழங்கிய அணிந்துரை

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவகாமிநாதனின் திருவருளை மனங் கொண்டு அராலி மேற்கிலே வசித்த சிவஞானச்சித்தர் கந்தஞானியாரின் வாழ்க்கை வரலாறுகள் மீண்டும் நூல் வடிவம் பெற்று வருவது போற்றுதற்கும் பராட்டுதற்கும் உரிய செயல்களாகும்.

பாரத நாட்டிலும் நமது ஈழ நாட்டிலும் சித்து வேலைகளில் கை வந்த சித்தர்கள் பலர் தோன்றி வந்திருக்கிறார்கள் சித்தர்களுக்கெல்லாம் தலைமைச் சித்தராக திருமூலநாயனார் கொள்ளப்படுகின்றார். அந்த வழியிலே ஈழ நாட்டின் வட பகுதியான யாழ்ப்பாணத்திலும் கிழக்கு பகுதியான மட்டக்களப்பு முதலான இடங்களிலும் பல சித்தர்கள் வாழ்ந்து வந்த வரலாறுகளை எல்லாம் நாம் அறிவோம்.

அத்தகைய பின்னணியில் அராலி மேற்குப் பகுதியில் கிட்டதட்ட 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர்தான் கந்தஞானி என்ற தீட்ஷா நாமத்தைப் பெற்றார் இவர் வாழ்ந்த காலப் பகுதி ஒல்லாந்தர்கள் இலங்கையை ஆண்ட காலம் சமய போட்டிகளும் கிறிஸ்தவ மிஷனறி மார்களின் சமயப் போட்டிகளும் கிறிஸ்தவ மிஷனறி மார்களின் சமயப் பிரச்சாரங்களும் நிலவிய காலம் இவரது பேரனாரான சங்கரப்பிள்ளை என்பவர் திருநீறு அணிந்து சென்றமையால் ஒல்லாந்தரால் கல்லுண்டாய் வெளிப்பகுதியில் கொலை செய்யப்பட்டார். என்பதும் செவி வழிக்கதை இந்த பின்புலங்களோடு, கந்தஞானியார் அராலி மேற்கில் தற்போது உலோவை சிட்டி விநாயகர் அமைந்திருக்கும் இடத்தில் சிறிய மண்டபம் அமைத்து ஞான நிஸ்டையில் இருந்து ஞானம் கைவரப் பெற்றார். இவரால் பல அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. அவை எல்லாம் இம் மலரில் அழகாக எழுதப்பட்டு தொகுக்கப்பட்டு இருக்கின்றன.

சங்குவேலிப் பகுதியில் இருந்த ஒருவருடைய குஸ்டநோயை நீக்கியமை, கீரிமலைப் பகுதியில் இருந்த பெண் ஒருவருடைய மனநோயை நீக்கியமை, அராலி ஆகாயக்குளம் விநாயகர் ஆலய மகோற்சவ குருவின் நோயை நீக்கியமை, அராலி களவத்துறை வைரவரை ஸ்தாபித்தமை, முதலான பல அற்புதங்கள் ஞானியாரால் நடாத்தப்பட்டன.

அராலி மேற்கில் இருந்த ஞானியார் வயல்களால் சூழப்பட்ட அராலி தெற்கு உதரான்பதி சிந்தாமணி விநாயகர் மாட்டு மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டவர்.

"பிள்ளையார் இருக்கிறார் திடீரென எழுவார்"
சிந்தாமணிப் பிள்ளையாரிடம் தேர் ஓடும் அராலி சிறக்கும்"

என்ற இரண்டு வசனங்களையும் அடிக்கடி கூறுவார் என்பது செவி வழிக்கதை இன்று பார்க்கும் இடத்து ஞானியார் குறிப்பிட்ட இரண்டு வசனங்களும் உண்மை என்பதைக் காட்டுவது போல இராஜகோபுரங்கள் மண்டபங்கள் எனப் புதுப் பொலிவு பெற்றும் தைமாத அமாவாசையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு மகோற்சவம் நடாத்தும் ஆலயமாகவும் சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயம் உயர்வு கண்டு இருப்பதை காணலாம்.

அதே ஆலய அறங்காவலர்கள் வடக்கு வீடு என்று சிறப்பாக அழைக்கப்படுவார்கள் அவர்களின் வீட்டுக்கு உரிய நிலையம் ஞானியரே எடுத்துக் கொடுத்தார்

" இதில் ஒரு வீடு வரும் அது மாளிகையாகும் " என்று வாக்கு கூறினாராம் அதன்படி அவர்கள் வீடு கட்டிஞானியார் எடுத்த அதே நிலத்தைத்தான் தனது தாய் வீட்டு நிலமாகக் ( சுவாமியறை) கொண்டு இன்றும் வீட்டைப் புதுப்பித்திருக்கின்றார்கள்.

ஞானியார் வாழ்ந்த வரலாற்றை மெய்ப்பிக்க அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவித்த கட்டில்கள், செம்புகள், பிரம்பு, மிதியடி, அவர் கைபட எழுதிய ஏடுகள், திருகை, அம்மி, முதலான பல பொருட்களும் காணப்படுகின்ற கல்வெட்டுக்களும் அவர் வாழ்ந்த வரலாற்றை உண்மைப்படுத்த சான்றாகின்றன.

ஞானியரால் சில பொன் மொழிகள் .......................உள்ளன. எனச் செவி வழிக்கதைகள் மூலம் அறிகின்றோம்.

1. "அண்டம்பெருவெளி ஒருகால் அராலியில்
நின்றால் காங்கேசன்துறை தெரியும்"

2. "சிந்தாமணிப் பிள்ளையாரில் தேரோடினால்
அராலி சிறக்கும் "

3. "இவ் ஆலயச் சூழலில் தங்கத்தாலான அம்மியும் குழவியும் உண்டு. அதை எடுத்துத் தருவதற்கென்றே ஒரு பிள்ளை பிறக்கும்"

4. " கள்ளக்கணபதி அராலியில் உண்டு"

இப்படி பல வாக்கியங்களைக் குறிப்பிட்டுள்ளார் இவரைப் போல இவர் பரம்பரையில் வந்த ஆச்சியா என்ற பெண்மணியும் சில சித்து வேலைகளைக் கைக்கொண்டு ஒரு சித்தர் போல வாழ்ந்தார். என்றும் சிதம்பரத்தில் மார்கழித் தேர் காணச் சென்ற போது அங்கே இருந்தவர்கள் இவரை விரட்ட தனது சித்து வலிமையால் நடராஜரின் தேரை நிறுத்தியதாகவும் பின் அவர்கள் மனம் மாறி இவரிடம் மன்னிப்பு வேண்ட மீண்டும் தேரை ஓடச் செய்ததாகவும் ஒரு செவிவழிக்கதை உண்டு

அருள்மிகு கந்தஞானியருடைய வாழ்க்கைச் சுவடுகளை தொகுத்து நூலாக்கும் முயற்சி முதன் முதல் 13.03.1965இல் அமரர் முத்தையாபிள்ளை பொன்னுத்துரை ஆசிரியர் அவர்களால் தொடக்கப்பட்டது. சிறிய நூலாக 10 பக்கங்களைக் கொண்டது) இம் மலர் வெளியிடப்பட்டது இம் மலரின் முற்பகுதியில் கந்தஞானியாரின் வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செந்தமிழுந் சிவநெறியும் தழைத்தினிது
சிறந்தோங்கும் யாழ்ப்பாணத்து
வந்தொளிரு மராலியூர் வளம் பொலிய
வருமினிய கந்தஞானி
சிந்தைநிறை சித்தாந்த நெறிமுறையின்
சிவ வாழ்வு கண்ட சீலன்
சுந்தரனாஞ் சாட்குண்ணிய மூர்த்தி ஞானித்
தூயோய் நின் புகழ் தான் வாழ்க.

என்ற பாடல் மூலம் தொடங்குகின்றது.

ஞானியாருடைய வரலாறுகளை தொடுக்கும் இரண்டாவது முயற்சி ஆசிரியமணி அமரர் ச.விசுவநாதர் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு அவரின் பல அற்புதங்களையும் குறிப்பிட்டு எழுதப்பட்டு 19.12. 1994 இவ் நூலசிரியர் வாயிலாக ஓர் உரை நடை மரபு அராலியில் தளைத் தோங்கி வருகின்றது.

நல்லை நகர் ஆறுமுக நாவலரால் தொடங்கப்பட்ட புராண படன உரை மரபு அவர் மாணவரும் மருமகருமாகிய வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை அவர் மாணவர் அராலி சி ஆறுமுகம் அவர் மாணவர் அராலி க. நாகலிங்கம் அவர் மாணவர் அராலி ச. விசுவநாதர் என்று ஓர் மாணவ பரம்பரை இவருக்கு ஊடாக வந்திருக்கின்றது.

கந்தஞானியாருடைய வரலாறுகளைத் தொகுத்து வெளியிடும் மூன்றாவது மலரான இம்மலர் மதிப்புக்குரிய ஓய்வுபெற்ற உப தபால் அதிபர் பஞ்சாட்சரமூர்த்தி கந்தஞானியார் அவர்களின் குடும்பத்தினரின் நல்ல முயற்சி ஞானியாரின் வரலாற்றோடு அருகில் இருக்கும் மனோன்மணி அம்பாளின் வரலாற்றையும் இணைத்து நூலாக்கி வெளியிடுகின்றார்கள். கந்தஞானியருடைய அற்புதங்கள் அனைத்தும் இங்கே தொகுக்கப்பட்டு இருக்கின்றன. மார்கழித் திருவெம்பாவை நல்ல நாளில் இம் மலர் வெளிவருவது சிவசாமிநாதனின் திருவருள் என்பதை மனங்கொண்டு இப் புனிதப்பணியை செய்யும் அனைவருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலரை வாசித்து அறியும் அன்பர்களுக்கும் எல்லாம் வல்ல சிவசாமி நாதனின் திருவருள் கிடைக்கப் பெற வேண்டிப் பிரார்த்திப்பதோடு கந்தஞானியாரின் வரலாறுகள் பல்கலைக் கழகங்கள் மட்டத்தில் பட்டப்படிப்புக்களுக்காக ஆய்வுகளுக்கு எடுக்கப்பட்ட வேண்டியவை வருங்காலச் சந்ததியர் அவ்வாறு எடுத்து ஞானியாரின் வரலாறுகளையும் ஆவணப்படுத்த திருவருள் துணை நிற்பதாக.

சுபம்

"பண்டிதமணி வாசா"
ஆகாயக் குளம் பதி
அராலி தெற்கு.

அராலியூர் கணேச.மங்கள மூர்த்தி
ஆசிரியர்
முல்/மாங்குளம் ம.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அராலி மேற்கு
## அருள்மிகு கந்தஞானியாரின்
## சீவிய சரித்திரம்

பொற் பொதுவில் தோன்றினீர் பூங்கோயில் விட்டெழுந்தீர்
விற்புருவ மத்தியில் மேவினீர் - தகற்பரம்
நான் நீ என மொழித்த ஞானியார் தானே
ஏன் நீர் என் நெஞ்சத் திரும்.

குருபாதமே துணை

அருள்மிகு கந்தஞானியாரின் சீவிய சரித்திர வரலாறு எங்கள் ஆராய்ச்சிக்கு எட்டிய வரையில் கர்ண பரம்பரைக் கதையிலிருந்து, அன்பர்களின் அன்பான சமூகத்திற்குச் சமர்ப்பிக்கும்படி தொகுக்கப்பட்டது.

### அருள்மிகு கந்தஞானியாரின் பிறப்பும் இளமையும்

ஒல்லாந்தர் காலத்திலே ஈழநாடு என்று கூறப்படும் இந்த இலங்கையின் சரித்திரத்தை நாம் உற்றுநோக்குவோமாயின் சரித்திர நூல்களின் கண்ணே குறிக்கப்படாத எத்தனையோ இன்னல்கள் இலங்கையின் வடபாகத்திலிருந்த தமிழ் மக்களுக்குக் குறிப்பாக சைவ நன்மக்களுக்கு நிகழலாயின. மெய்ச்சயகிய சைவமும் அதை அனுட்டித்த சைவ நன் மக்களும் அடைந்த துன்பத்தை நாம் இவ்வளவு என்ற வரையறுத்துக்கூற முடியாது.

அக்காலத்திலே யாழ்ப்பாணத்திலே வலிகாமம் மேற்கிலே வட்டுக் கிழக்கிலே சங்கரப்பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். இவருடைய தாய் தந்தையரைப் பற்றியோ இவருடைய வம்ச வரலாறுகளைப் பற்றியோ அறியக்கூடிய வரை முயற்சி செய்தும் அது எம் கைக்கு எட்டவில்லை.

இதனால் மனம் வருத்தம் அடைந்தாலும் உள்ள சரித்திரத்தைக் கொண்டு மெய்யன்பையும் பக்குவநிலையையும் வெளியிட மனமானது தூண்டியது. எட்டாத மெய்ப்பொருளைக் கிட்டாத பாவியேன் என்று நினைத்து, நினைந்து மனம் நைந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக, உடல் புளகாங்கொள்ள சரீரம் குறு வியர்வை கொள்ள, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நான் செய்வது சரியோ பிழையோ என்ற பயத்தோடு எழுத எத்தனித்தேன்.

எத்தனித்தபொழுது எனக்கு மணிவாசகப் பெருமானுடைய ஒரு திருவாக்குப் புலப்பட்டது. அத்திருவாக்கு எனக்கு எப்படியிருந்தது என்று மூறப்புகின் நடுக்கடலில் தத்தளிப்பவனுககு அகப்பட்ட புணை போலவும், பிறவிச் சாகரத்திலகப்பட்டவனுக்குத் தென்பட்ட திருஜந்தெழுத்தைப் போலவும் இருந்தது. இத் திருவாக்குத்தான் எமது மணிவாசகர் சீவகோடிகள் உய்யும்படி திருவாய் மலர்ந்தருளிய "நன்றே செய்தாய் பிழை செய்தாய் நானோ இதற்கு நாயகமோ" என்ற வாக்கு உலகத்தில் உள்ள சிறந்த வாக்குக்களெவையும் கசிந்து உருகும் மணிவாசகர் வாக்குக்கு ஒப்பாகாதன.

இவ்வாக்கைச் சிரமேற்கொண்டு சரித்திரத்தைத் தொடர்ந்து எழுத எத்தனித்தேன். சங்கரப்பிள்ளை என்பவர் மிகுந்த சைவப்பற்றுடையவர். முறுகிய பக்தியும் இறுகிய மனமும் அஞ்சாத வீரமும் அதிதீவிர பக்குவமுடைய மெய்யன்பர் . சிவமும் சிவ சின்னமுமென்றால் அதற்காக உயிரையும் விடக்கூடிய பக்குவநிலை உடையவர். சமய உண்மைக்காகப் போராடும் தன்மையும் அஞ்சா நெஞ்சமும் உடையவர். இவர் ஒல்லாந்தர் காலத்தில் வசித்தார்.

## ஒல்லாந்தருடைய ஆட்சியும் சைவசமயமும்

இக்காலத்திலே ஒல்லாந்தர் தங்களுடைய புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்காக சைவ நன் மக்களைச் சிவசின்னங்கள் அணியாமலும், சைவ ஒழுங்கின்படி விரதங்களனுஸ்டியாமலும், தங்கள் அரசியல் அதிகாரத்தைக் கொண்டு தடை செய்து வந்தனர். பிறநாட்டு அரசியலினால் இலங்கைக்கு ஏற்பட்ட சமய இடுக்கண்கள் கிளம்பின.

போர்த்துக்கேயர் உரோமன் கத்தோலிக்க சமயத்தைத் தங்கள் அரசியற்காலத்தில் பயத்தாலும் நயத்தாலும் புரட்டஸ்தாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தைப் பரப்பினார்கள். ஆனால், ஆங்கிலேயரும் அமெரிக்கரும் பயத்தை விடுத்து நயத்தாலேயே பரப்பினாாக்ள். சமயத்தைப் பரப்புவதற்கு ஏற்ற இடம் இளம் சிறார்களுடைய உள்ளமே என் கண்டு நாட்டில் கல்விக் கழகங்களிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

அக்காலத்தில் ஆட்சி புரிந்த ஒல்லாந்தர் சிவசின்னங்களை பாடியும் விரதம் முதலியவைகளுக்கு உண்ட வாழை இலைகளை வெளியில் கண்டால் அவ்விரதம் அனுஸ்டித்தவர்களைத் துன்புறுத்தியும் வந்தனர். விரதமாகிய தவத்தின் பலனை நன்கு அறிந்த சைவ நன்மக்கள் விரதம் அனுஸ்டிக்காமல் விடவில்லை. விரதத்தைஅனுஸ்டித்தார்கள். ஆனால், அவ்விரதங்களுக்கு உண்ட வாழை இலைகளை மட்டும் ஒல்லாந்த உளவுக்காரர்கள் அறியாமல் வீட்டுக் கூரைகளுக்குள் ஒளித்து வந்தனர்.

இது மட்டுமல்ல ஒல்லாந்தருக்கு இன்னுமொரு எண்ணமும் உதிக்கலாயிற்று. அவர்களுடைய அழிவு காலத்திற்குப் போலும் அவர்கள் சைவ ஆலயங்களை இடித்து அழித்தால் என்றும் அழியாத சைவத்தை அழிக்கலாம் என்று நினைத்தார்கள். பரம்பொருளுக்கு எப்படித் தொடக்கம் அறிய முடியாதோ அதேபோலச் சைவ சமயத்திற்கும் சைவ நன் மார்க்கத்தைக் கூறும் அமிர்த நன் மொழியாகிய தமிழுக்கும் தொடக்கம் அறியவே முடியாது. இறைவன், சைவம், தமிழ் இம் மூன்றும் ஆதியந்தமற்ற முழுப்பொருட்களென்பதே எம் கருத்து. இவற்றை எவ்வாறு எவர் முயன்றாலும் அழிக்க முடியாதென்பதில் சந்தேகமில்லை.

அழிக்கமுடியாத சைவத்தை அழிக்கும் தீயநினைவை மனதிற்கொண்டு சைவ ஆலயங்களை இடித்தனர். இப்படி இடிக்கப்பட்ட ஆலயங்கள் பல. இவற்றிலே வட்டுக்கோட்டையில் பீற்றர் கேணிமாதாவின் கோயில் என்று அழைக்கப்படும் கண்ணகை அம்மன் ஆலயமும், அராலியில் ஆகாயக்குளத்து மாதாவின் கோயில் என்று அழைக்கப்படும் விநாயர் ஆலயமும் மாதாவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் என்று கூறப்பட்டதனால் மேரிமாதாவின் கோயில்கள் என்று இடிக்காமல் விடப்பட்டன என்று இவற்றை ஆன்றோர் வாயிலாகக் கேட்டறிந்திருக்கிறோம்.

இவ்வாறு சைவ நன்மக்களின் இதயங்களைப் புழுங்கச்செய்த ஒல்லாந்தர்கள், மக்களிடம் காணப்படும் சமய சின்னங்களை அழித்தால் சைவம் அழியும் என்ற தப்பு அபிப்பிராயம் மேற்கொண்டவர்களாய், பின்வருமாறு செய்யலாயினர்.

அந்நாளில் வட்டுக்கோட்டையிலிருந்து யாழப்பாணம் போவதென்றால் கல்லுண்டாய் வழியாக நடந்தே போகவேண்டும். வழி ஜனசஞ்சாரமற்ற காடு. இக் காட்டிற்குள் அவர்கள் தங்கள் கொலை பாதகர்களை வைத்து அவ்வழியாக வருபவர்களுள் சிவசின்னம் தரித்து வருபவர்களை அப்படித் தரித்து வரக்கூடாது என்று எச்சரிக்கை செய்து மும்முறை தவணை கொடுத்து நான்காவது முறையும் தரித்து வருவார்களேயானால் அவர்களைக் கொலை செய்யும்படியும் கட்டளையிட்டார்கள் இது இவ்வாறு நிகழுநாளிலே சைவம் தழைத்தோங்கவும் ஒல்லாந்தருடைய பயமுறுத்தல் தொலைந்தொழியவும் அஞ்சாமையும் சமயப்பற்றும் என்றென்றும் மங்காத் தீபம் போல ஒளி விட்டெரியவும் பின்வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஒல்லாந்தரின் துரதிஸ்டவசத்தினாலும், சைவ உண்மை நிலைபெற்று ஓங்க வேண்டுமென்ற ஒப்பற்ற இயற்கையன்னையின் நியதியினாலும் அந்த வழியாகச் சங்கரப்பிள்ளை என்னும் மெய்யன்பர் வந்தார். அவருடைய நெற்றியிலே ஔவைப்பாட்டியார் கூறிய "நீறில்லா நெற்றி பாழ்" என்ற வாக்கை நன்கு உணர்ந்ததனாலும் திரு ஞானசம்பந்தர் கூறிய "மந்திரமாவது நீறு" என்ற தேவாரத் திருப்பதிகத்தின் சிறப்பை நன்கு உணர்ந்த்தினாலும் மங்காது ஒளி காணும் எங்கோமான் மருந்தாகிய விபூதி நிறைந்து விளங்கியது. அவரைக் கண்ட ஒல்லாந்தர் மனம் புழுங்கியது. உடனே அவர்கள் அவருக்கு விபூதி தரித்துக் கொண்டு இவ்வழியாக வரக்கூடாது வந்தால் கொலை செய்யப்படுவீரென்று எச்சரித்தார்கள். அவர் அவ்வழியே யாழ்ப்பாணம் சென்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது முறை இவர் யாழ்ப்பாணம் போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இவருக்கு ஒல்லாந்தருடைய முதலாவது எச்சரிக்கை ஞாபகத்திற்கு வந்தது. என்றாலும் ஒளவையினுடைய "நீறில்லா நெற்றிபாழ்" என்ற திவ்விய வாக்கை நினைத்தார். ஒளவையினுடைய நீதி நூல்களிலுள்ள செய்யுட்களில் நிரம்பியிருக்கும் தத்துவக் கருத்துக்கள் அளவிடக்கரியன. இவற்றிலுள்ள தத்துவங்களைச் சிறுவர்களுக்கு உரிய நீதி வாக்கியங்கள் என்று நினைத்துப் பெரியோர் கவனியாது விடுவது எவ்வளவு அறியாமை. இதை நினைத்த மெய்யன்பர் விபூதியை மீண்டும் தரித்துச் சென்றார். அவரை மீண்டும் வழிமறித்து எச்சரிக்கை செய்து ஒல்லாந்தர்கள் செல்லும்படி விடுத்தார்கள்.

தெய்வச் செயலாக மெய்யன்பர் மூன்றாவது முறையும் யாழ்ப்பாணம் போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் ஞானசம்பந்தரின் அருட் பாடலை நினைத்தார். அது எவ்வாறு குலசேகர பாண்டியனது வெப்பு நோயையும், கூனையும் நீக்கியது என்பதை மனம் நெக்குருக நினைத்தார். அந்த மருந்தை யான் மறப்பதா? புனையாது விடுவதா? ஞானசம்பந்தர் மந்திரமாவது நீறு என்று கூறிய திருப்பாடல்களையும் அப்பாடல்களின் அபார சக்தியையும் மறந்தல்லவா யான் இவ்வீணர்களுடைய எச்சரிக்கைக்குப் பயந்து நீறு புனையாது விடவேண்டும். அப்படிச் செய்யின் நான் எழா நரகிற்கு ஆளாவேனேயென்று மீண்டும் நீறு புனைந்து சென்றார்.

அப்படி நீறணிந்து சென்ற அன்பரை ஒல்லாந்தர் திரும்பவும் எச்சரிக்கை செய்து போய் மீண்டும் நீறு தரித்து வருவீராயின் உம்மை நிச்சயமாய் கொலை செய்வோம் என்று கூறியனுப்பினார் கள். அதனைக் கேட்டு மௌனம் சாதித்துச் சென்றார் மெய்யன்பர். "மௌனமென்பது ஞானவரம்பு" என்பது முதுமொழியன்றோ.

இது நிற்க இறுதிநிலையைச் சிறிது ஆராய்வோம் - சைவசமய மேன்மைய இப்பிரபஞ்ச உலகிற்கு நிலைநிறுத்த அவதரித்த அதிதீவிர பக்குவ நிலையும் அஞ்சா நெஞ்சமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யன்பும் தெய்வ கடாட்சமும் வாய்க்கப் பெற்ற அவர் நான்காவது முறையும் யாழ்ப்பாணம் அவ்வழியாகப் போகும் நிலை ஏற்பட்டது.

உயிரில் பார்க்கச் சிவசின்னமே மேம்பட்டது. என்று நினைத்து மெய்யன்பர் உயிர் போகினும் சிவசின்ன மகிமை போகக்கூடாது என்ற தீவிர சிந்தை மேலீட்டினால் உடல் புளாங் கொள்ளச் சரீரம் மயிர்கூச்செறிய மனம் நெக்குருக எம் தலைவராகிய சிவபிரானை வணங்கிய சிந்தையுடையவராய் விபூதி தரித்துச் சென்றார்.

அவர் ஒல்லாந்தரை அடைந்த உடனே அவர்கள் தங்கள் அஞ்ஞான மறைப்பினாலே மெய்ஞானியராகிய அவருடைய திருவுள்ளக் கருத்தை அறிய முடியாமல் அவரைக் கொலை செய்யும்படி கட்டளையிட்டார். இறைவனின் மெய்யன்பர்கள் உலகிலே வேறு யாருக்குமே பயப்பட மாட்டார்கள். அஞ்சா நெஞ்சமும் உண்மைப் பொருளுமாக இவர்களோடு சென்றார்.

அவர்கள் கல்லுண்டாய்க்குச் சமீபமாக இருப்பதும் இப்பொழுது இரட்டைப் பனையடி என அழைக்கப்படுவதும் அப்போது தூக்குமரக் காடாயுமிருந்த அவ்விடத்திற்கு மெய்யன்பரை இட்டுச் சென்றார்கள். அப்படி இட்டுச் சென்றபொழுது அக்கடற்கரையிலே பற்றைகளிலே தூங்கியிருந்த நரிகளெல்லாம் வால்களைக் கீழே போட்டுக்கொண்டு இக் கொடிய நிகழ்ச்சியை நாங்கள் பார்த்திருக்கக்கூடாதென்று ஓடத் தலைப்பட்டன. கடற்கரையில் மேய்ந்த மந்தைகள் ஆ! இதென்ன கொடுமையென்று அலமலர்ந்துபார்த்து வாலைக் குலைத்து ஓடத் தொடங்கின.

காற்று ஓ வென்று அலறியடித்தது. இயற்கையாகக் கடலுக்குள்ள இரைச்சல் நீங்கி அவ்விடத்தேயுள்ள சமுத்திரம் என்ன நடக்கிறது பார்ப்போம் என்று ஓசையடங்கியது. நீர் குறைந்தது. ஒடுங்கியது அது அன்று தொடக்கம் இன்று வரை நிசப்தமாயிருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டும் ஈனர்களாகிய ஒல்லாந்த கொலை பாதகர்கள் மெய்யன்பரை வெட்டினாக்ள். மெய்யன்பர்களின் சிரம் வீழ்ந்தது. சைவ நன்நிலையும் சிவசின்னப்பெருமையும் மங்காத நிலையெய்தின நாட்டிலேயுள்ள மக்கள் இதை அறிந்தார்கள். கண்ணீர் ஆறாகச் சொரிந்தார்கள். ஆ! தெய்வமே இப்பாதகர்களின் செயலைக் கேட்கத் தெய்வமும் இல்லையா? "கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில் கடம் புலி வாழும் காடு நன்றே" என்று புலம்பினார்கள். பக்குவநிலை கூடிய பலர் கூடிக்கூடி மெய்யன்பரின் சரித்திரத்தைப் பேசிப் பேசி ஆனந்தித்தார்கள். அன்று முதல் அவர் தோன்றிய சந்ததியினருக்கு வெட்டுணி மாதர் கூட்டம் என்று பெயர் நிகழலாயிற்று. இது நிகழ்ந்தது சுமார் 18 ம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கொள்க.

**கந்தஞானியாரின் பிறப்பும் இளமையும்**

இவருடைய சந்ததியிலே இவருக்க ஒரு பேரன் திரு அவதாரம் செய்தார். எப்பொழுதும் பேரனுடைய குணாதிசயங்கள் பேரனிடத்தில் காணப்படும் என்பது அனுபவம் மிக்க பெரியோரின் கொள்கை. பேரன் என்பவன் எவ்பொழுதும் பெயருக்குரியவன் என்று கருதப்பட்டுப் பெரியோர்கள் எப்பொழுதும் பேரனின் பெயரைப் பேரனுக்கு இடுவார்கள். அதே பிரகாரம் வெட்டுணி மாதராகிய சங்கரப்பிள்ளையின் பெயர் அவருடைய பேரப்பிள்ளைக்கும் சங்கரப்பிள்ளையென்று சூட்டப்பட்டது. இவருடைய திரு அவதாரம் சுமார் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கொள்க.

இது நிற்க இராமலிங்க சுவாமிகளின் திருவாக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யானொருவனன்றோ என அவர் அறிதற்கரிய பரம்பொருளை வினவி நிற்கும் பக்குவ நிலையைப் பாருங்கள். எப்பொழுதும் மெய்யன்பர்கள் மெய்யன்பு பாலிக்கும் பண்பட்ட திருவுளம் பாடக் குடும்பத்திலே தோன்றுவார்கள். இதை நீவீர் உண்மையன்பர்களின் சரித்திரங்களைத் துருவித் துருவி ஆராயும் தோறும் அறிவீர்கள். பரராச முனிவர் பிறக்கும்போதே பக்குவநிலையடையமுயன்றார் கைகூடவில்லை. அவருடைய மகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதவியாசர் முயன்றார் கைகூடவில்லை. ஆனால் அவர்களுடைய தவப்பேறெல்லாம் திரண்டு பரராசமுனிவருடைய பேரன் சுகர் பிறக்கும்பொழுதே பக்குவ நிலையுடையவராய்ப் பிறந்தார் என்பது நூல்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது.

சங்கரப்பிள்ளை பிறந்து வளர்ந்து வந்தார். இவரோடு ஏழு பெண் சகோதரர்களும் பிறந்து வளர்ந்து வந்தார்கள். இவருடைய தாய் தந்தையரின் பெயர் எவ்வளவு ஆராய்ந்தும் அறிய முடியாமல் இருக்கின்றது. மெய்ப்பொருள் கிட்டவில்லையே என்று மனமுடைந்த யான் இத் திவ்விய சரித்திரத்தை எழுதத் தகுதியுடையோனோ? அடாத செயலைச் செய்கின்றேனோ என்று மனம் மிக வருந்தி எனது தகப்பனாரின் வாக்கிற்கு அமைய உண்மையன்பையும் அருள் நிலையையும் தெய்வ கடாட்சத்தையும் உலகினருக்கு அறிவிக்கும் பேரவாவானது என்னைத் தூண்டத் தூண்டச் சரியேது பிழையேது என்று அறியும் முற்றறிவற்ற பாவியாய் நாயினும் கடைப்பட்ட யான் இதனை எழுதப் புகுந்தேன்.

இவருடைய ஏழு சகோதரிகளும் வட்டுக் கிழக்கிலும் வேறு இடங்களிலும் விவாகம் செய்யப்பட்டனரென்று யான் பெரியோர்கள் வாயிலாகக் கேட்டறிந்தேன். இவருடைய கல்வியைப் பற்றியோ இளமை வளர்ப்பைப் பற்றியோ அதிகமறிய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகுந்த ஞானியாரின் விவாகமும் இல்லறமும்

இவருடைய விவாகம் இவருடைய பெண் சகோதரிகளுக்கு முன்னரோ பின்னரோ என்று கூறமுடியாது. அக்காலத்தில் பெண் பெற்றோரும் பெண்ணோடு பிறந்தோரும் பெண்களுக்கு முதலில் விவாகம் செய்து கொடுத்துப் பிறகே ஆண்களுக்கு விவாகஞ் செய்து கொடுக்கும் பெருநோக்குடையவராயிருந்தனர்.

இது தற்போதும் சில பண்பட்ட குடும்பங்களில் நடைமுறையில் இருக்கின்றது என்றாலும் பெரும்பாலும் அது அவர்களுடைய வயதுகளையே பொறுத்திருக்கும். சுமார் ஐந்து வயதுக்கு அல்லது பத்து வயதுக்கு இளைய ஒரு பெண் சகோதரமிருந்தாலும் அதை விவாகம் செய்து கொடுத்த பின் விவாகஞ் செய்வார்கள். இது இவ்வாறு இருக்க தற்போது (கொட்டைக்காடு) என்று அழைக்கப்படும் அராலி மேற்கிலே விநாயகர் கொற்றரென்பவருக்கு கொத்தியர், வைரவியார் என்று இரு பெண் குழந்தைகள் இருந்தனர். இவர்களுள் கொத்தியாரை இச் சங்கரப்பிள்ளையென்பவரும் வைரவியாரை வட்டு மேற்கிலேயுள்ள வேலாயுத உடையாரென்பவரும் விவாகஞ் செய்தார்கள்.

சகோதரிகள் எழுவரும் விவாகஞ் செய்தபின் சங்கரப்பிள்ளை தன் தாயோடும் பிரிய பத்தினி கொத்தியாரோடும் தற்போது அருளம்பலம் வளவு என்ற அழைக்கப்படும் கந்தஞானியார் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள ஓர் வளவிலே வாழ்ந்து வந்தார். இவ்வாறு அவர் இல்லற வாழ்க்கை நடாத்தி வருகையில் அவருக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் ஆண்குழந்தைக்கு அருணாசலம் என்று பெயர். பெண் குழந்தைக்கு அம்மன்னா என்று பெயர். இச் சங்கரப்பிள்ளையினுடைய தந்தையார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சிறுவராயிருக்கும் பொழுதே இறந்து விட்டாரென்று பெரியோர்கள் கூறக்கேட்டிருக்கின்றேன்.

இவ்வாறு இல்லறம் நடத்திக்கொண்டு வருகின்ற நாட்களிலே இவருடைய பிரிய பத்தினியாராகிய கொத்தியார் இறந்தார். அதன் பின் சங்கரப்பிளை தன் மகளாகிய அம்மன்னா மங்கைப் பருவமடைந்திருந்தமையாலும் தாயற்ற பிள்ளையாயிருந்தமை யினாலும் விரைவில் விவாகம் செய்துகொடுக்க வேண்டாம் என்று எண்ணினார். உடனே அவ்வூரிலேயே கேவளப்பிலம் என்ற அழைக்கப்படும் ஒரு இடத்திலேயுள்ள கேவளப்பிலத்து மனுஷன் என்று அழைக்கப்படும் ஒருவருக்கு விவாகம் செய்து கொடுத்தார். இவருடைய எழுத்துப் பெயர் சிதம்பரப்பிள்ளை என்று அறியமுடிகிறது. இது நிகழ்ந்தது சுமார் 18ம் நூற்றாண்டளவிலாகும்.

மகளின் விவாகம் நடந்தபின் இவருக்குப் பக்குவநிலைவந்து கைகூடவே தம் வெட்டுணி மாதர் குடும்பத்தின் நிலையை நினைத்து நினைத்து மனமுருகினார். இவர் தன்னுடைய பொருள் பண்டங்கள் எல்லாவற்றையும் விற்றார் .

உண்மையான மெய்ப் பொருளைத் தேடிச் செல்லும் மெய்ஞானியாகிய அவருக்கு இந்த பிரபஞ்சத்திற்குரிய பொய்ப் பொருளெல்லாம் எதற்கு? திருவாதவூரடிகளின் கூற்றாகக் கடவுள் மாமுனிவர் எடுத்துக்கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது. மின்னும் நிலையில்லா விழுப் பொருள் யாவும் வேண்டேன் உன்னடி யடைந்து நாயேன் உறுபவ மொழிதல் வேண்டும் இதை நன்கு உணர்ந்து போலும் அவர் மெய்ப்பொருளாகத் தேடுவதற்காக யாத்திரை செய்யத் தீர்மானித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாத்திரை சிதம்பரம்

இல்லற வாழ்க்கைப் பொறுப்புக்கள் சிறிது சிறிதாகத் தம்மை விட்டு நழுவவிட்டாலும் நமக்குப் பொறுப்பாயிருந்த தாயையும் ஒரேயொரு மகனையும் கூட்டிக்கொண்டே யாத்திரை செய்யத் தீர்மானித்தார். தாய் வயோதிபம் அடைந்தாலும் மகன் சிறுவராயிருந்தாலும் யாம் முன்னரே கூறிய பிரகாரம் பொன் பொருள் ஆஸ்திகளை விற்று மெய்ப்பொருள் தேடப் பணநிலை ஆக்கிக் கொண்ட தன்மையினாலே அஞ்சாது புறப்பட்டார்.

## சிதம்பர யாத்திரை

அக்காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி சைவ நன் மக்கள் யாத்திரை செய்வதென்றால் இந்தியாவில் நாப்பண் உள்ளதும் சைவ ஆலயங்களில் மூலஸ்தானம் என்று அழைக்கப்படுவதும், இதைவிட தில்லையம்பலம், பொன்னம்பலம், சிதம்பரம் என்று கூறுப்படுவதுமாகிய தலத்தை மனத்திற்கொண்டே யென்பதை மறந்துவிடக்கூடாது. இத்தலத்திற்கும் மக்கள் யாத்திரை செய்வது புண்ணியகாலமும், தேவர்களுடைய விடியற்காலமும் என்ற கூறக்கூடிய திருவெம்பாவைக் காலத்திலேயாகும். இத் திருவெம்பாவைக் காலமே கன்னிப் பெண்கள் தங்களுக்கு நல்ல கணவர்கள் கிடைக்கும்படி கடவுளை நோற்கும் காலமாகிய பாவை நோன்புக்காலம் எனப்படும் .

இக்காலத்தில் சைவநன் மக்கள் மணிவாசகப் பெருமான் பாடிய திருவெம்பாவையைப் பாடி பாவை நோன்பு நோற்பார்கள். ஆனால் வைஷ்ணவ சமய கன்னிப் பெண்கள் ஆண்டாள் பாடிய திருப்பாவையைப் பாடி நோன்பு நோற்பார்கள். இக்காலத்தில் சிதம்பரத்திலே பக்தர்கள் குழுக்களைப் பார்க்கக் காணலாம் .இம்மெய்யன்பரும் அக்காலத்தில் அங்கு சென்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யன்பராகிய சங்கரப்பிள்ளையின் தொடர்பை விடுக்கக் கருதிய பரம்பொருளாகிய இறைவன் அவரின் தாயாரை அங்கே இறக்கும்படி செய்தார். அவர் தம் தாயாருக்குச் செய்யவேண்டிய அந்தியக் கிரியைகளையெல்லாம் அவ்விடத்தின் கண்ணே செய்து முடித்துவிட்டு மகனோடு அங்கே இருந்தார்.

இப்படியிருக்கும் காலத்திலே ஒரு நாள் விடியற் காலத்திலே திருவாதிரைக் காலம் திருப்பள்ளியெழுச்சி யோதும் நேரம் என்று முன்னோர்கள் சொல்லக் கேள்வி. அந்த நேரத்தில் சங்கரப்பிள்ளை சிதம்பர ஆலயத்துள் சென்று நின்றார். அப்பொழு அத் திவ்விய தலத்தின் கண்ணேயுள்ள அன்பு மேலீட்டையுடைய பிராமணர் அதாவது தில்லை மூவாயிரம் அந்தணர்களுள் ஒருவராகிய தீட்சிதர் சங்கரப்பிள்ளையைப் பார்த்து மெய்யன்பனே உன்னடைய முகத்தில் பொருள் படிகின்றது. பொருட்படிவு உன்னை மலையடிவாரம் அழைக்கின்றது. செல்லுதல் நன்று என்று கூறினார். உடனே அதிதீவிர பக்குவியான தம்மையினால் அதற்கு உடன்பட்டுத் தன்னுடைய மகனை யாது செய்வது என்று யோசித்தார். அப்பொழுது அங்கேயுள்ள தீட்சியர்களில் ஒருவர் தன்னோடு இட்டுச் செல்லும்படி வேண்ட அவர் தன் மகனை அவருடன் விட்டுச் செல்லத் தீர்மானித்தார். அப்பொழு மலையடிவாரத்திற்குச் செல்லும் தபோதனர்கள் பதினாறுபேர் அவரோடு வருகிறோம் என்று கூறி அவ்விடத்தினின்றும் புறப்பட்டனர்.

**மலையடிவார யாத்திரை**

இப்படியாக மலையடிவாரத்தை நோக்கி யாத்திரை செய்யும் பொழுது அப்பதினாறு பேரும் தபோதனர்களாயிருந்த தன்மையினாலேயே அவர் விஷஜெந்துக்கள் தீண்டினாலும் விஷம் ஏறாது உட்கொள்ளும் மலைமூலிகை மருந்துகளை அவர்கள் உட்கொள்ளத் தாமும் அதை உட்கொண்டு சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிச் சதுரகிரி முதலிய பல மலைகளைக் கடந்து எல்லோரும் இமயமலையடிவாரம் சென்றார்கள். அவரோடு சென்ற பதினாறு பேரும் தத்தம் கால எல்லை முடிந்த தன்மையினாலே இறந்து விட்டார்கள். சங்கரப்பிள்ளை ஒருவரே தனித்திருந்தார்.

## தனிமை

முன் பலரோடு சேர்ந்து பிரபஞ்சத்தில் இல்லறம் நடத்தியவரும் பின் சிதம்பரத்திலிருந்தவருமாகிய சங்கரப்பிள்ளை இறுதியில் தனக்குத் துணையாயிருந்த தபோதனர் பதினாறு பேர்களையும் இழந்த தனித்தவரானார். தனிமையை நினைத்து மனம் பதை பதைத்து இறைவனை நினைத்துப் புலம்பினார். "யாருமற்ற இடத்திலேயே தெய்வம் துணை" என்பது பழமொழி. மெய்யன்பருக்கு ஒரு வயோதிபப் பிராமண வடிவமுள்ள ஒரு குரு பிரசன்னமானார். குரு தரிசனம் கண்ட மெய்யன்பர் தாய்ப் பசுவைக் கண்ட கன்று போலவும் குளிர் நிழலைக் கண்ட வழிப்போக்கனைப் போலவும், திசையறி கருவி மூலம் திசையை அறிந்த மாலுமி போலவும் நெடுநாட் கடற்பிரயாணம் செய்தோன் கரை கண்டாற்போலவும் மகிழ்ச்சியடைந்தார்.

## குரு தரிசனம்

குரு தரிசனம் சங்கரப்பிள்ளைக்கு இவ்வாறு ஆறுதல் அளித்ததெனினும் அவர் பசி தாகம் முதலியவற்றால் மிகவும் இளைப்படைந்திருந்தார். இதைக் குறிப்பாலும் ஞானதிருஷ்டியாலும் அறிந்த குரு அவரைப் பார்த்து அன்பனே உனக்குப் பசி தாகம் அதிகம் இருக்கின்றது போலத் தோன்றுகிறது. இதோ காட்டிற்குள் தெரிகிற இல்லத்திற்குப் போ, அங்கே உனது பசி தாகம் தீர ஒரு அம்மணி இரந்து உணவு பரிமாறுவார். நன்றாக உணவை உட்கொண்டு நீர் அருந்திய பின் திரும்பி வரவும். ஆனால் ஒன்றை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளவும் பின் அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கக்கூடாது என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்த ஞானியார் எனும் திருநாமம்

குருவின் கட்டளையை எந்த நேரத்திலும் கடவாத பக்குவியாகிய சங்கரப்பிள்ளை அப்படியே பசியையும் தாகத்தையும் நீக்கிய பின் திரும்பிப் பாராது வந்தார். இந்த முறைப்படியே குரு தன்னுடைய சீடனின் பசி தாகங்களைப் பலமுறை நீக்கிய பின் அவர் தம் கற்பனைக்கமைந் தொழுகிய தன்மையையும், தம் மனத்தைத் தம் குருவின்பாலேயன்றி வேறிடம் செலுத்தாதிருத்தலாகிய மனோ வலிமை மன அடக்கம் முதலாகிய மேலான குணங்களையும் கண்டு, குரு அவரைக் கந்தஞானி என்று அழைத்தார். இந்த ஞான நாமமே அவருடைய திருநாமமாகப் பின் விளங்கிற்று. கந்தஞானியாருக்கு திரி காலமும் உணரும் சக்தி உண்டாயிற்று. குருவும் கந்தஞானியாருமாகப் பல காலம் மலையடிவாரத்தில் இந்தப் பிரகாரம் சஞ்சரித்த பின், குரு அவரைப் பார்த்து நீ கீகடதேசம் எனப்படும் ஈழதேசத்திற்குப் போ அங்கே உனக்குப் பொசிப்பிருக்கு என்றார்.

## ஈழம் திரும்பல்

கீகடதேசமென்றாலும் ஈழமென்றாலும் இலங்கையேயாகும். குரு இந்தப் பிரகாரம் கூற மெய்யன்பரும் பக்குவியுமாகிய கந்தஞானியார் தமது குருநாதரைப் பிரியமாட்டாதவராய் நெருப்பிலிடப்பட்ட வெண்ணெய் போலவும், வெந்தழலில் இடப்பட்ட மெழுகு போலவும், தாயைப் பிரியும் இளம் மகவு போலவும், தலையீற்றுப் பசுவைப் பிரியும் கன்று போலவும் மனமானது நெக்கு உருகினார். இவருடைய வருத்தத்தைக் கண்ட குரு இவரை எப்படியாவது ஈழம் கொண்டு வரவேண்டும் என்ற நினைத்து பின் நிகழப்போவதை ஞானதிருஷ்டியினால் அறிந்து தாமும் அவரோடு கூடிக்கொண்டு ஈழத்திற்கு வந்தார். குருவும் அவரும் எம்மார்க்கமாக வந்தார்கள் என்பது ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டு நிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதல் வசிப்பிடம்**

மெய்யன்பரும் குருவும் ஈழம் வந்து வட்டுக்கோட்டை அண்மித்ததாக இருக்கும் அராலி மேற்குக் கிராமம் தற்போது கொட்டைக்காடு என்று அழைக்கப்படும் கிராமத்தை அடைந்தார்கள். இக்கிராமத்தில் சில பாகம் அராலி மேற்கென்றும் சிலபாகம் வட்டு மேற்கென்றும் பண்டுதொட்டு இன்றுவரை வழங்கி வருகின்றது. முன் வட்டு மேற்கு என்று அழைக்கப்பட்ட இந்த இடத்திலேயமைந்த வடலட்டி மடம் (இதைக் குருமடம் என்றும் கூறுவர். என்று வழங்கப்படும். அம்பலவாண சுவாமிகளுக்குரியதுமாகிய இந்த மடத்திலேயே இருந்தார்கள். முன் கந்தஞானியருடைய பேரன் வட்டுக்கோட்டையில் பிறந்ததாலும் அவருடைய சகோதரிமார் வட்டுக்கோட்டையிலே விவாகம் செய்ததனாலும் கந்தஞானியர் அராலியில் வசித்ததனாலும் பண்டுதொட்டே அராலியும் வட்டுக்கோட்டையும் சைவ நன் மக்கள் வாழ்ந்த பண்பாடுடைய கிராமங்களென்பது சொல்லாமலே விளங்குகின்றது. இந்தப் பண்பாடுடைய கிராமங்களிலே மதமாற்றம் செய்வதற்கென்றே அமெரிக்க மிஷனரிமார் தங்கள் கிறிஸ்தவ ஆலயத்தையும் முன் வட்டுக்கோட்டை செமினாரி என்று அழைக்கப்படுவதுமாகிய கல்விக்கழகத்தையும் அமைத்தும் அவை அவர்களுக்கு மதமாற்ற முறையில் அதிக பலன் அளிக்கமுடியவில்லை காரணம் அங்கு இடப்பட்டிருந்த அத்திவாரமான சமய பண்பாடேயாகும். ஆனால், அமெரிக்க மிஷனரிமாரின் கல்விக்கழகம் இங்கு நிலவி வட்டுக்கோட்டைக்கு மாத்திரமன்று, இலங்கை முழுவதுக்கும் ஆற்றிய கல்விப்பணி இம்மாத்திரமன்று. இக்கல்லூரியில் உள்ளமைப்பு வெளியமைப்பும் இதன் கண் நிலவிவரும் நூல்நிலையமும் எங்கும் கிடையாதன. அமெரிக்கமிஷன் ஆசிரியர்களால் தகுதி வாய்ந்தவர்களை அமைப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தது. நான் இத்தீவின் எப்பகுதிக்குச் சென்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் யாழ்ப்பாணக் கல்லூரியிலேயே கல்வி பயின்றேன் என்று மிகுந்த பெருமையுடன் கூறி வருகிறேன்.

### தீர்த்தம்

இது இவ்வளவில் நிற்க! அவர்கள் இருந்த மடத்திற்கு அருகாமையில் புதிதாக ஒரு கேணியும் உண்டு பண்ணப்பட்டிருந் தது. அக்கேணியில் கந்தஞானியரும் குருவுமாகத் தினம் தினம் ஸ்தானம் செய்வது வழக்கம் அக்கேணியில் குரு அங்கவஸ்திரம் அலம்பும்படி இரண்டு யார் பாறைக்கல்லு ஒன்று வைக்கப் பட்டிருந்தது. அந்தக்கேணியில் ஒரு பூப்படைந்த பெண் முழுகி அசூசிப்படுத்தியிருந்தாள். இதை ஞானதிருஷ்டியினால் கந்தஞானியாரின் குரு அறிந்திருந்தார்.

### குருவின் அற்புதம்

குரு நீராடும்படி கெங்கைக்குச் சென்றார். அவ்விடத்திலிருந்த கல்லைத் தமது காற் பெருவிரலினாலே உந்தினார். கல் ஆகாயமார்க்கமாகக் கண்ணுக்கு எட்டாத தூரம் வரை சென்று திரும்பி அப்பாறை கீழே வரும்போது குரு தமது தலையைக் கொடுத்தார். அப்பாறை நாலாகப் பிளந்தது. அன்று முதல் இன்று வரை அக்கேணியில் பெண்கள் ஸ்தானம் செய்வதில்லை. ஆண்கள் மயிர்வெட்டினோர் ஆசௌசக்காரர் ஸ்தானம் செய்தல் கிடையாது. மலங்கழித்தோர் அடிக்கழுவுதலும் கிடையாது. அக்கேணி இன்றும் உலோலசிட்டிக் கேணியென்ற பெயரோடு விளங்கி வருகின்றது. கந்தஞானியாருடைய கேணியென்ற பெயரோடு விளங்கி வருகின்றது. கந்தஞானியருடைய குரு அம்மடத்திலிருந்த தூண் ஒன்றோடு சேர்ந்தேயிருப்பார். அத்தூண் சந்தண வாசம் வீசியது என்பது ஆன்றோர் கூற்று. அந்த மடம் இப்போது அழிந்து விட்டது .அதன் தென் பக்கத்திலே தற்போது ஒரு பிள்ளையார் கோவில் உண்டாகியிருக்கின்றது. அதற்கு உலோலசிட்டி பிள்ளையார் கோயில் என்று பெயர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு திரும்பிச் செல்லுதல்

இப்படியே இவர்கள் குருவும் சிஷ்யனுமாயிருந்து வருகின்ற காலத்திலே, ஒருநாள் குருதான் திரும்பிப் போகவேண்டும் என்று கூறினார். பின் அவர் புறப்படும்பொழுது அதிதீவிர பக்குவத்தை உடையவராகிய கந்தஞானியார் விடாது பின்தொடர்ந்து சென்றார். குரு கீரிமலைக் கடலுக்குச் சென்றார். கந்தஞானியாரும் அவரை விடாது பின் தொடர்ந்து சென்றார். குரு தண்ணீருக்குள்ளே இறங்கினார் .கந்தஞானியாரும் இறங்கினார். இருவரும் வாயூறு தண்ணீர் வரை சென்றார்கள். குரு அந்தர்த்தானமாகச் சித்து ரூபமாய் மறைந்தார். அப்பொழுது ஆகாயத்திலிருந்து "அப்பன் மறைந்த இடத்தில் மாளப் போகிறாயோ" என்று ஓர் அசரீரி வாக்கு கேட்டது. உடனே கந்தஞானியார் மீண்டு கரைக்கு வந்தார். விழுந்தார், புரண்டார், அழுதார் பின் தாமும் குருவும் முன் இருந்த மடத்திற்குத் திரும்பினார். தம் குருவைச் சதா தியானித்த வண்ணமாயிருந்தார். குரு இவரை விட்டுப் பிரியும் பொழுது தானாக நினைத்து தன் பாதச் சுவடுகளை அவரிடம் கொடுத்துச் சென்றார். பக்குவநிலை முதிர்ந்தோர் பாத வணக்கத்திலேயே கண்ணும் கருத்துமாயிருப்பர். பாதம் லிங்கம் மூர்த்தம் ஆகியவற்றை அஞ்ஞானிகளறிவார்.

## கந்தஞானிமாலை அறிதல்

மீண்டும் வந்த உலோலசிட்டி மடத்தில் இருந்த கந்தஞானியாரை அவ்வூரவர்கள் இன்னாரென அறியவில்லை. அவர் ஒரு பெரியவரென்றே எண்ணியிருந்தார்கள். பலர் அப்பெரியவரைப் பார்க்கும்படியும் அவருடைய அற்புதங்களைப் பார்க்கும் படியும் தங்களுடைய நோய்களைத் தீர்க்கும் படியும் அவரிடம் வந்து போவார்கள். இப்படி இருக்கும் நாளிலே அவருக்கு மகள் முறையான சின்னத்தங்கா என்னும் பெண் அவருடன் ஒரு நாள் சம்பாசித்துக்கொண்டு இருக்கும்பொழுது அவருடைய புன்சிரிப்பைக் கண்டு ஓ கள்ளா ! நீயா ? எங்கே போய் இரந்து இருக்கிறாய் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார் உடனே தனக்கு மகள் முறையாவர் என்பதை நன்கு அறிந்திருந்த அவர் "ஏ கள்ளி ! என்னை இப்பிரபஞ்சத்திற்கு காட்டிக் கொடுக்கவா வந்தாய் ? " என்று கேட்டார். இவர் மடத்தில் இருக்கும் வரையும் சிதம்பர உடையார் தினந்தோறும் பால் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம்.

ஒருநாள் உடையாரின் மனைவி "பிள்ளைக்குப் பாலைக்கொடாமல் எங்கே கொண்டுபோகிறாய்" என்று கேட்டார். இதை ஞான திருஷ்டியால் அறிந்த ஞானியார் பாலைக் கொணர்ந்த உடன் "எனக்கு வேண்டாம் கொண்டு போய்ப் பிள்ளைக்குக் கொடு என்று கூறினார். இதனால் மனமுடைந்த உடையார் மறுகி நிற்க "அப்பனே சிவன் கோயில் ஒன்று கட்டு" என்று வாக்குக் கூறினார். சிதம்பர உடையார் இக்கிராமத்தில் உள்ள வண்ணபுரத்திலிருக்கும் சிவன் கோயிலை அமைத்துள்ளார் என ஓர் ஐதிகம் நிலவுகின்றது.

கந்தஞானியரை இன்னாரெனக் கண்டுபிடித்த சின்னத்தங்கா தன்னுடைய நோயையும் தன் பிள்ளைகளுடைய நோயையும் நீக்கும் பொருட்டே இவ்விடம் வந்தார். பின்னரே அவருடைய பிள்ளைகள் இருவராகிய ஆச்சியா, மூளாய்த் தம்பர் ஆகிய இருவருடைய பிறவி நோயை நீக்கி அவ்விருவரையும் தமது ஒப்பற்ற அடியவர்களாய்க் கொண்டவர், இவருடைய பேரப்பிள்ளைகளே இவைகள். இவர்களுக்கு முறையே வேதநாயகம் என்றும் விசுவநாதரென்றும் பெயராகும்.

**சிவக்குடிசை அமைத்தல்**

கந்தஞானியரை விட்டுப்பிரிந்த அவருடைய குரு தானாகவே பாவித்து வணங்கும்படியாகக் கொடுத்த இரண்டு பாதங்கள் அவரிடமிருந்தன. இன்னும் அவரிடம் ஓர் பெரிய புராண ஏடும், திருவாசக ஏடும் இவற்றோடு மலையடிவாரம் செல்லும்போது தற்பாதுகாப்பிற்கு வைத்து இருந்த ஈட்டி முதலிய தெய்வப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கலங்களும் கட்டில், கதிரை முதலியனவும் உண்டு. இவற்றோடு அவர் நெய் விளக்கும் வைத்திருந்தார். ஞானியார் தனது மனைவிக்குரியதாகிய பெரிய கலட்டி என்று சொல்லப்படும் ஒரு தோம்பு நிலத்திலே ஒரு சிவக்குடிசையமைத்து அக்குடிசை யினிடத்தே பாதங்களையும் நெய்விளக்கையும் வைத்துக்கொண்டு வசித்து வந்தார். பின் தனது மகனைச் சிதம்பரத்திலிருந்து அழைத்தார்.

**அடியார் கூட்டம்**

நாகேந்திர ஐயா (நாகேந்திர மடம்)

இப்படியாக இவர் வசிக்கும் காலத்திலே வடக்கிலுள்ள நாகேந்திரர் என்னும் ஐயர் இவருடைய பக்குவ நிலையை அறிந்து தேனுள்ள மலரை வண்டு நாடிச் செல்வது போலவும், சர்க்கரை உள்ள போத்தலை எறும்பு சுற்றித் திரிவது போலவும் ஞானியாரை விட்டுப் பிரியாது இராப்பகலாக அவருடனேயே கதைத்துக்கொண்டு அவ்விடங்களிலேயே சுற்றிக் கொண்டிருப்பார்.

சாப்பாட்டிற்குப் போகார் ஞானியார் "ஐயா போய்ச்சாப்பிட்டு விட்டு வாரும்" என்று கூறினால் அவர் உலோல சிட்டியில் ஞானியாரும் குருவும் ஸ்ஞானம் செய்த கங்கையில் முழுகிவிட்டு சந்தியா வந்தனத்தை முடித்து விட்டு அதற்குப் பக்கலாகவுள்ள கொய்யாப் பற்றைகாட்டுக்குச் சென்று அவற்றில் உள்ள கொய்யாப்பழங்கள் காய்களைப் பிடுங்கிச் சாப்பிட்டுவிட்டு பின்பு ஞானியாரிடம் வந்து ஞானியாரோடு கதைத்துக்கொண்டு இருப்பார்.

இவர் இத்தீர்த்தத்தில் ஸநானம் செய்து தம்மோடு கதைத்துக்கொண்டிருக்கும் போது ஐயரைப் பார்த்து ஞானியார் "சாப்பாடாயிற்றோ" என்றால் "ஆம்" என்பார். இதை ஞான திருஷ்டியால் அறிந்த ஞானியார் "ஐயரே உமக்கு அரைப்படி அரிசி எசமான் கற்பித்து இருக்கின்றார். நீர் இனி இல்லத்திற்குச் சென்று உண்டு வரலாம்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கேயும் அம்மாவிற்கு எசமான் உங்கட்கு அரைப்படி அரிசி கற்றித்திருக்கிறார் என்று ஆகாயத்தில் இருந்து ஒரு அசரீரி வாக்குக் கேட்டது. அந்தப் பிரகாரமே அவர்கட்கு எப்பொழுதும் நடந்து வந்தது. எவ்வளவு மேலதிக வரவு வந்தாலும் அம்மா அரைப்படியென்ற எசமானின் கட்டளைக்கு மேல் சமைப்பதே கிடையாது. எவ்வளவு விருந்தினரையும் இப்படியுடனே உபசரித்து வந்தனர்.

## சிவக்ஞான தம்பிரான்

இப்படியிருக்குங் காலத்திலே வட்டுக்கோட்டையிலே தற்போது இருக்கும் அத்தியடிப்பிள்ளையார் கோயில் மடத்திற்கு அண்மையிலே ஓர் மடத்திலே சிவக்ஞானதம்பிரான் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் கந்தஞானியார் இடத்திற்குச் செல்லும் அன்பர்களை வழிமறித்து "எங்கே போகிறீர்கள்? ஏன் அந்தப் பண்டாரியிடம் போகிறீர்கள்" என்று கேட்பார். இவர் புராண காவியங்களைக் கற்றுத் தம்பிரானாய் இருந்தும், கந்தபுராணத்தைக் காலால் தட்டிவிட்டுச் சைவசமயம் பொய் என்று கூறி கிறிஸ்தவ சமயமே மெய்யென்று கிறிஸ்தவ சமயப் பிரவேசம் செய்ய எண்ணியிருந்தார். இதைத் தமது ஞானதிருஷ்டியினாலும், மற்றையோர்கள் கூறவும் கேட்ட ஞானியார் "ஒன்றிற்கும் அவசரப்படாதீர்கள் எல்லாக் காலமும் நேரமும் வர அவன் வருவான்" என்று கூறுவார்.

வட்டுக்கோட்டையிலிருந்து தற்போது ஞானியார் மடம் போகும் தெரு அப்போது ஒரு நடை வரம்பாக இருந்தது. அந்த நடை வரம்பால் ஒரு நாள் ஞானியார் தெற்கேயிருந்து வந்தார். சிவக்ஞானதம்பிரான் வடக்கேயிருந்து வந்தார். ஞானியார் தமது பிரம்பினால் வட்டமாக ஒரு கோடு கீறி "பண்டாரி இக்கோட்டினுள்ளே நில், விபூதி பூசுவோம்" என்றார். அவருடைய பார்வை பட்ட மாத்திரத்தே பக்குவமடைந்த தம்பிரானும் அப்படியே நின்றார். ஞானியார் முதலில் தம்முடைய நெற்றியிலே விபூதியைப் பூசினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவக்ஞானத் தம்பிரான் அவருடைய நெற்றியை உற்றுப் பார்த்தார். அதற்குள்ளே சிதம்பர தரிசனத்தைக் கண்டார்.

விழுந்தார், புரண்டார், புலம்பினார். தன் கையிலிருந்த முத்திரையாகிய பிரம்பையும் ஞானியாரிடம் கொடுத்தார். சதா அவரை விட்டு நீங்காத அடிமையாகினார். ஞானியார் சிவக்ஞானதம்பிரானைப் பார்த்து "ஏ பண்டாரி நீ புழுத்துச் சாவாய் நான் இழுத்துச் சாவேன்" என்று கூறினார்.

### களவத்தை வயிரவரைத் தாபித்தல்

இப்படியிருக்கும் நாளிலே அராலி தெற்கு என்னும் கிராமத்தில் பெரிய கெடுதிகள் விளைந்தன. கர்ப்பிணிப் பெண்களுக்கும் கன்றுத்தாச்சி மாடுகளுக்கும் அனர்த்தங்கள் ஏற்பட்டன. இதைச் சகிக்க மாட்டாத சனங்கள் அருள்மிகு கந்தஞானியாரிடத்திலே போய் முறையிட்டார்கள். கந்தஞானியார் அவர்களை ஒரு வெள்ளி செவ்வாயிலே வாருங்கள் பார்ப்போம் என்று சொன்னார். அவர்களும் அந்தப் பிரகாரமே வந்தார்கள். உடனே ஞானியார் அவர்களோடு கூடிச்சென்று பார்வையிட்ட பொழுது வைரவக் கடவுள் அந்தரங்கமாக உலாவக் கண்டு அவரைச் சகாதேவன் என்று அழைத்துச் சென்ற அவர் இருக்கத் தகுந்த களவத்துறை என்னுமிடத்தில் கோயில் ஸ்தாபித்து அங்குள்ள சனங்களைப் பார்த்து "இவர் இவ்விடத்தின் கண்ணே இருப்பார். நீங்கள் வெள்ளி செவ்வாயிலே விளக்கு வைக்க வேண்டும். வைகாசி மாசத்தில் ஒரு நாளாவது நிற்க இவருக்கு பாற்பொங்கல் பொங்க வேண்டும். இவர் உங்களுக்குச் சகல செல்வங்களையும் தருவார். இவ்விடங்களில் ஒரு பழுதுமில்லாமல் காப்பாரென்றும் கூறினார்.

### ஞானியாரின் மகனின் விவாகம்

இது இவ்வளவில் நிற்க! இவர் தன்னுடைய மகனுக்கு விவாகம் செய்ய நினைத்தார். தன்னை முன்னரே உலோலசிட்டி மடத்திலே இப்பிரபஞ்சத் தாருக்குக் காட்டிக் கொடுத்ததற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுவாக விளங்கிய தன் மகள் முறையாகிய சின்னத்தங்கரினதும் அம்பலவாணரினதும் மகளாகிய வேதநாயகம் என்னும் இயற்பெயருடைய ஆச்சியாவை மூளாயிலிருந்து கொண்டு வந்து விவாகம் செய்து வைத்தார். ஆச்சியாவோடு அவருடைய தம்பியாகிய விசுவநாதரும் வந்து இருந்தார்.

இந்த விசுவநாதராகிய தன் மருமகருக்குத் தன் மகனைப் பாடல் சொல்லிக் கொடுக்கச் சொன்னார். அவர் பாடல் சொல்லிக் கொடுத்தார். அவருக்கு இவர் நன்றாகப் படிக்கவில்லையென்ற கவலையால் தம் மைந்தனரென்றாலும் "அப்பு இந்த மோட்டுப் பையன் படியாதாம்" என்று கூறுவார்.அப்பொழுது ஞானியார் "அவன் முன்னிலையில் கைகட்டி நிற்கச் சொல்லிக்கொடு" என்றார். பின் திருவாசகப் புத்தகத்தைப் பெற்ற தன்மையினாலேயும் ஒரு திருவருள் ஞானியாக் விளங்கினார். பின் ஞானியார் தன்னுடைய மகனுக்குப் பிள்ளையில்லாதிருக்கக் கண்டு அவர் திருவருளை வேண்ட திரு அருட்கடாட்சத்தால் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

**விநாயகத்தம்பியின் நட்பு (படித்தவர்)**

அராலி தெற்கில் விஜேந்திரனுடைய சந்ததியில் விநாயகத்தம்பி என்னும் நாமமுடைய ஒருவர் ஞானியாருக்கு ஒப்பற்ற நட்புடையவரும் அடியவருமாக இருந்தார். அவருடைய சந்ததியில் நாலு ஆண் பிள்ளைகள் பிறந்ததுமில்லை அப்பிள்ளைகள் நாற்பது வயசிற்கு இருந்ததுமில்லை. எங்கள் சந்ததியில் க்ஷயம், சூன்மம், கயரோகம் ஏ்னறும் நோய்கள் உள்ளன. இவர்கள் நால்வரும் உங்களுடைய தன்மையினால் எனக்குக் கிடைத்தவர்கள். இவர்கள் உங்களுக்கே அடைக்கலம் என்று கூறியிருந்தார்.

இவருக்கு ஆயுள் குறுகி விட்டதென்பதை ஞானியார் அறிந்து "விநாயத்தம்பி உனக்கு மணிச்சத்தம் கேட்டதே" என்று கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்று கூறிவிட்டுப் பின்னும் சிறிது நேரமிருந்து வீட்டிற்குப் புறப்பட்டார். அவர் சிறிது தூரம் போகுமுன் மணிச்சத்தம் (சேரமான் பெருமாநாயனாரின் காண்டாமணியோசை) கேட்டது என்றார். உடனே கந்தஞானியார் "உனக்கு ஆயுள் முடிவு நெருங்கியிருப்பதால் ஆறு மாசத்திற்கு நீ யென்னைக்காண முடியாது. அந்த ஆறுமாச முடிவில் நான்உன்னிடத்திற்கு வருவேன்" என்றார்.

விநாசித்தம்பி வீட்டிற்குச் சென்று எழுந்திருக்கமாட்டாத நோயாளியாய் இருந்தார். ஆறுமாச எல்லையில் கந்தஞானியார் அவருடைய வீட்டிற்குச் சென்றார். சென்ற உடனே அவர் ஆசனம் கொடுத்துக் கந்தஞானியாரை இருத்தினார். இருத்தி அவருககுப் பூசை செய்தார் என்று ஆன்றோர் சொல்லக் கேள்வி. இருத்திப் பூசை செய்தபின் "அன்பரே நான் ஊருக்குச் செல்லப் போகிறேன் என்னுடைய பிள்ளைகள் உம்முடையபொறுப்பு" என்று கூறினார். இந்த அதிசயத்தைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள்.

**விநாயகத்தம்பியின் புத்திரர்களின் விவாகம்**

"என் புத்திரர்களுடைய விவாகம் உம்முடைய பொறுப்பு" என்று கூறிய அவருக்கு ஞானியார், விநாயகத்தம்பி பயப்படாதே அம்பலவாணருக்கு மாதகல் சுப்ப உடையார் மகள் சுந்தரத்திற்கு விவாகம் என்று அறிந்துகொள் விசுவநாதருக்கு பெரிய ஆசையர் மகள் சின்னத்தங்கத்திற்கு விவாகம் என்று அறிந்து கொள். வைத்தியநாதருக்குச் சன்னம்மான் மகள் சின்னனுக்கு விவாகமென்று அறிந்து கொள். இராமநாதனுக்குக் கந்தன் தலையிருந்தால் பார்த்துக் கொள்ளுகிறேன் என்று கூறிவிட்டு ஞானியார் புறப்படுகிற பொழுது "நான் வீட்டிற்குச் செல்கிறேன். விநாயகத்தம்பியைப் பிடியுங்கள் என்றார். உடனே விநாயகதம்பி ஏகாந்தமாய் விட்டார். இவ்விவாகங்கள் அந்த அந்த விவாகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்க எத்தனையோ ஆண்டுகட்டு முன் வாக்களிக்கப்பட்டன. பின்னும் அவைகள் தவறாது நிறைவேறின. தாரமும் குருவும் தலையின் விதிப்படி என்ற பழமொழியுண்டு. ஞானியார் தலைவிதியை அறிந்த சிவன் முக்தராக விளங்கினார்.

இராமநாதரின் விவாகம் விநாயகத்தம்பிக்கும் தனக்கும் விருப்பமில்லாத இடத்திலேயே நடக்கும் என்பதை ஞான திருஷ்டியினால் அறிந்த தன்மையினாலே அப்படிக் கூறினார். பின் சொக்கருடைய சுந்தரத்திற்கு இராமநாதருக்கு விவாகஞ் செய்து கொடுத்தவுடன் "பசுவை அடித்துப் புலிக்குத்தானம் கொடுத்திருக்கு" என்று கூறினார். அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அறிந்தவர்களுக்கே இக்கூற்றின் கருத்து நன்கு விளங்கும்.

**காய்ச்சல் நோயைப் பிரம்பில் ஏற்றல்**

இஃது இப்படியிருக்க அராலி தெற்கிலிருக்கும் ஆகாயக்குளத்து விநாயகர் கோயிலில் திருவிழா உற்சவத்தை நடத்தும்படியாக வந்த குருக்களுக்கு காத்திரப் பிரகாரமாகக் காய்ச்சல் நோயுண்டாக உற்சவம் தடைப்படும் என்று பயந்து அவ்விடத்தின் கண்ணேயுள்ளோர் எல்லோரும் குருக்களோடு ஞானியார் மடத்திற்கு வந்து முறையிட்டார்கள். உடனே ஞானியார் பெருமானை நினைத்து முன் தமக்குச் சிவஞானதம்பிரான் கொடுத்த பிரம்பை எடுத்து அந்தப் பிரம்பைப் பிடிக்கும்படி குருக்களிடம் கொடுக்க அவரும் பிடித்தார். உடனே குருக்களுக்கிருந்த குலைப்பனும் காய்ச்சலும் அந்தப் பிரம்பிற்கு பிடித்து விட்டது. ஞானியார் அந்தப் பிரம்பைக் கூரையில் செருகினார். இந்த அதிசயத்தைக் கண்ட எல்லோரும் மயிர்க்கூச்செறிந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து மெய் சிலித்தார்கள். பின் ஞானியார் குருக்களைப் பார்த்து உற்சவம் முடிந்தவுடன் தன்னை வந்து காணும்படி கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காய்ச்சலை மீண்டும் குருக்களுக்குக் கொடுத்தமை**

ஞானியார் கூறிய பிரகாரமே உற்சவம் முடிந்தவுடன் குருக்கள் அவரிடம் வந்தார். பின்பு ஞானியார் மேலேயிருந்த பிரம்பைக் கூரையினின்று எடுத்து குருக்களிடம் கொடுத்தார். பிரம்பிலிருந்த குலைப்பன் காய்ச்சல் மீண்டும் குருக்களுக்குப் பற்றிக் கொண்டது. இதையறிந்த சனங்கள் ஆச்சரியமும் வியப்பும் பக்தியும் கொண்டனர். உடனே ஞானியார் குருக்களைப் பார்த்து "உம்முடைய பிராத்துவத்தை நான் நீக்கக்கூடாது. அவரவர் அனுபவிக்க வேண்டியதை அனுபவித்தே தீரவேண்டும். இது உமக்கு உற்சவத்தை நடத்துவதற்காகச் சிறிது ஆறுதல்" என்று கூறியருளினார்.

**பிராரத்துவம் நீக்கக்கூடாதது**

ஞானியார் தாமே வாத நோய் மேற்கொண்டு வருந்தினார். அவர் அதனை நீக்கவில்லை. தான் எங்கேயாவது போக விரும்பினால் அவர் தன் வீட்டு வாசலில் நின்ற கிழுவையில் தன் காலிலே தட்டி அக்காலில் உள்ள வாத நோயை எடுத்து விடுவார். பின் போக வேண்டிய இடங்களெல்லாம் போய் வந்து கிழுவையில் தொட்டு வாத நோயைத் தன் காலில் வைத்து வாத நோயென்று இருப்பார்.

இது அருணந்தி சிவாச்சாரியாரின் வயிற்றுவலியை அவர் சீலையிலே விட்டுப் பின் மீட்டு ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சிபோன்றது.

**இழுத்துச் சாதலும் புழுத்துச் சாதலும்**

ஞானியார் சிவக்ஞான தம்பிரானுக்கு ஒரு முறை "ஏ பண்டாரி நீ புழுத்துச்சாவாய் நான் இழுத்துச் சாவேன்" என்று கூறினார். அப்படியே சிவக்ஞான தம்பிரானுக்குக் காலிற் பெரிய கிரந்தி நோய் புழுக்களும், கிருமிகளும் உண்டு. அதுவே அவருடைய மரணத்துக்கும் காரணமாக இருந்ததென்று தெரிகிறது. இது முன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சைவ சமயத்தை நித்தித்துக் கந்தபுராண ஏட்டைக் காலினாலே தட்டியதனால் ஏற்பட்டதெனக் கூறுவாருமுளர். ஞானியாருக்கு ஒரு கிரந்தியிழுவையுண்டு. அவர் படுத்து இருக்கையில் அவர் இழுக்கும் இழுவை ஒரு கூப்பிடு தொலைதூரம் கேட்கும். அவர் யாருடனும் பேசும் போதும் எங்கேயாவது போகும்போதும் இதனை நிறுத்திக்கொள்ளுவார். பின் வேறு வேளைகளில் பிராரத்துவத்தை நிறுத்தக்கூடாது என்று நினைத்து அனுபவித்து வந்தார். இந்த அதிசயத்தையும் எல்லோருமறிந் திருந்தார்கள்.

### மாலையை வருவித்தமை

அப்படி நிகழும் நாட்களிலே சந்தர்மடத்தடியிலே உள்ள ஒரு பெரியவரும் பெண்சாதியும் இவரிடத்தில் பிரியாத பேரன்புடையவர் களாக இருந்தார்கள். இவர்கள் கந்தஞானியார் தங்களிடத்திற்கு வரும்போதெல்லாம் அவருடைய பாதார விந்தங்களுக்கு அபிசேகம் செய்து வாசனைத் திரவியங்கள் சந்தனக்குழம்பு முதலியன அணிந்து பூமாலை கட்டி வைத்து அப்பூமாலையைச் சூட்டி வணங்குவது வழக்கம். அப்படியே சில காலங்களில் நடந்து வரும்பொழுது ஒரு நாள் கந்தஞானியாரும் அவருடைய மெய்யன்பருமாகக் கல்லுண்டாய்க் கூடாக கந்தர்மடத்தை நோக்கிப் போகும்போது ஞானியார் மெய்யன்பரைப் பார்த்து “நான் உமக்கு ஒரு விளையாட்டுக் காட்டுகிறேன் பாரும்” என்றார். பின்பு அவர் ஆகாயத்தை நோக்கிக் கையை நீட்டி ஆச்சியென்றார். அப்பொழுது அவருடைய கையிலே ஒரு மல்லிகை மாலை வந்திறங்கியது.

அவர் அந்த மாலையை மெய்யன்பரிடம் கொடுத்தார். பின் இருவரும் கந்தர்மடத்திலே அவர்களுடைய வீட்டிற்குச் சென்றார்கள். அவர்கள் வழக்கம்போல் பூசை அபிஷேகம் செய்து வாசனைத் திரவியங்ககள் அணிந்து முடித்த பின்னர் மாலை சூட்டுவதற்கு மாலையைப் பார்த்பொழுது காணாமையால் அங்கும் இங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடினார்கள். அவர்கள் அந்த மாலையை வழக்கமாகப் பெட்டகத்துள்ளே வைத்துப் பூட்டி வைப்பார்கள். அவர்களுடைய பரபரப்பைக் கண்ட ஞானியார் தன்னுடைய மெய்யன்பரைப் பார்த்து "உந்த மாலையைக் காட்டி உது தானோ அவர்களுடைய மாலையென்று கேளும்" என்று கூறினார்.

அப்படியே அன்பர் காட்ட அவர்கள் விழுந்தார்கள், புரண்டார்கள், அழுதார்கள். "சுவாமி இது தான் எங்களுடைய மாலை. எங்களைச் சோதிக்கிறீரே" என்று புலம்பினார்கள். மெய்யன்பரும் மற்றைய அங்கு குழுமியவர்களும் இந்த அதிசயத்தைக் கண்டு இன்பசாகரத்தில் மூழ்கிப் பலர்க்கு அவ்வதிசயத்தை எடுத்துக் கூறினார்கள். அந்தச் சந்ததியில் சீனிவாசகம் மகன் பொன்னம்பலமும் மனைவியும் ஞானியாரிடத்துப் பிரியா அன்புடையவர்களாயிருந்தனர். இவர்கள் கந்தஞானியார் இருந்த இடத்திற்கண்மையில் ஒரு மடமும் 18ம் நூற்றாண்டளவில் கட்டினார்கள். அது இன்றும் பொன்னர் மடம் என்ற பெயரால் விளங்குகின்றது.

**தீண்டிய விஷயெந்து இறந்தமை**

ஞானியார் ஒரு நாள் தமது அடியவரொருவருடன் வயல்வழியாக இராப்பொழுதிலே நடந்து சென்றார். அப்பொழுது அவருக்கு ஒரு விஷப்பாம்பு தீண்டியது. அவர் உடனே தனது மெய்யன்பருக்கு "எனக்கு ஏதோ ஒரு பாம்பு கடிக்கிறது" என்று உதறி விட்டுச் சென்றார். பின்பு அன்று இராக்காலம் கழித்து மற்றநாள் விடியற்காலை தம் மெய்யன்பனைப் பார்த்து "இராத்திரி ஒருவன் தீண்டினான் வா அவனைப் போய்ப்பார்த்து வருவோம்" மென்று கூறிக் கூட்டிக்கொண்டு சென்றார். பின் போய்ப் பார்த்தபொழுது அவரைத் தீண்டிய விஷப் பாம்பு இறந்து கிடந்தது. இதைக் கண்ட மெய்யன்பர் அதிசயித்து அதிசயத்தை எல்லோருக்கும் கூறி இன்ப சாகரத்தில் மூழ்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலே வீசிய சால்வை மழைக்குக் குடையாகச் சென்றமை**

ஞானியார் தமது மெய்யன்பர் ஒருவருடனே இப்பொழுது அராலி தெற்கிலிருக்கும் பெரிய குளத்துக்கால் சென்றார். செல்லும்பொழுது மழை பெய்ய ஆரம்பித்தது. அவர் மெய்யன்பருக்கு "மழை வரப்போகின்றது என்றாலும் ஆச்சியொன்றுக்கும் விடாள்" என்று கூறிவிட்டுத் தன் சால்வையை எடுத்து மேலே வீசினார். மழை ஏராளமாகப் பெய்தது. பக்கமெல்லாம் வெள்ளமாய் விட்டது. சால்வை மேலாகக் குடை போலச் சென்றது. ஞானியாரின் மேலே ஒரு துளி நீரும் படவில்லை .கால் அடியிலும் புழுதி பறந்தது. எல்லோரும் இந்நிகழ்ச்சியைக் கேட்டு ஆரவாரித்தார்கள். அதிசயித்தார்கள். ஆனந்தித்தார்கள்.

**ஞானியாரின் வாக்கு**

ஞானியார் இப்பொழுது ஞானியார் மடத்தின் முன்னே இருக்கும் கேணி இருக்கும் நிலையில் ஒரு செடிக்கிணறு இருந்தது. அதில் ஒரு நாள் இருக்கும்போது அராலி தெற்கிலிருக்கும் சித்தர் என்பர் தனது மகன் வயிரமுத்து மாடு மேய்க்க மாட்டேன்னறு பள்ளிக்கூடம் போகப்போகிறேனென்று புறப்பட்டான். தகப்பன் "பாடசாலைக்குப் போக வேண்டாம் மாடு மேய்க்கப்போ" என்று கலைத்து அடித்தான். அப்பொழுது ஓடி வந்து வையிரமுத்து கந்தஞானியார் இருக்கக்கண்டு அவருக்கருகே போய்ப் பதுங்கினான். உடனேஞானியார் சித்தரை அழைத்து "அடே சித்தம்பலம் நீ அவனை மறியாதே, படிக்க விடு அவன் வையிரமுத்தன் சென்னையில் பெரிய அச்சுக்கூடம் வைத்திருந்து பெரும்பொருள் சம்பாதித்து இராசாத்தியின் அஞ்சாப் பட்டயமும் பெற்ற பின் இங்கு வந்து மணியகாரனாகி அந்த நாளையிலே முதல் முதலில் இங்கு இரணைக்குதிரையும் வண்டிலும் வைத்து ஓடினார்.

அவருடைய முயற்சியாலே முன் அமெரிக்கன் மிஷன் பாடசாலையாயிருந்தது. இப்போது அது சைவவித்தியா விருத்திச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தினரது முருகமூர்த்தி வித்தியாசாலையென விளங்குகின்றது. இதெல்லாம் ஞானியாரின் வாக்குச் சித்தியினால் நடந்தேறின.

**மாடு அவிழ்க்க வந்தோர் கண் தெரியாது நின்றமை**

ஞானியாரிடம் ஒரு சோடி நல்ல மாடுகள் நின்றன .ஞானியாருக்கு ஊரிலுள்ளவர்கள் பல வகையான பழங்களையும் கொண்டு வந்து கொடுப்பார்கள். ஞானியார் அவற்றைத் தம் இல்லத்தில் ஒவ்வொரு மூலையிலே வைத்துக் கனி ரசம் வடித்து ஓட அது எசமானுக்கு ஆகும் என்று வைப்பார். தான் ஒன்றையும் எடுத்துத் தின்னார். அப்படி வைத்துவிட்டு அந்த மாடுகளுக்கு எடுத்து வைப்பார். மாடுகள் தின்றுவிட்டுக் கொழுத்து மூச்சு விட்டுக்கொண்டு நின்றன. இதையறிந்த தெய்வர் கொங்கர் என்ற இரு கள்வர்கள் அவருடைய வீட்டிற்கு மேற்கிலுள்ள ஒழுங்கையில் வந்து அந்த மாடுகளைக் களவாடப் பதுங்கியிருந்தார்கள். இதை ஞான திருஷ்டினியால் அறிந்த ஞானியார் எழுந்து சென்ற அவர்களைப் பார்த்து "எங்கே வந்தீர்கள் உப்படியே நில்லுங்கள்" என்று கூறினார். இது நடந்தது இராப்பதினொரு மணியளவில் ஞானியார் பின்வந்து படுத்து விட்டார். அவர்களால் நடக்கமுடியவுமில்லை. கண்தெரியவுமில்லை அப்படியே நின்றார்கள்.

அவர்கள் அப்படியே நின்றார்கள். ஞானியாரைக் கண்டவுடன் எம்பெருமானனே தெரியாமல் செய்து விட்டோம். மன்னிக்கவேண்டும் என்று கூறினார்கள். ஞானியார் போங்கள் இனிமேல் இப்படியான எண்ணம் கூடாது. என்று கூறினார். அவர்கள் அவரை வணங்கி உய்த்தோம் உய்த்தோம் என்று கூறிச்சென்றார்கள். இந்த அதிசயத்தைக் கேட்டோர் எல்லோரும் மிகவும் ஆனந்தங்கொண்டு மயிர்சிலிர்த்துச் சரீரம் நடுக்கம் எய்தி ஆனந்த பாஷ்பம் சொரிந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏமாற்ற வந்தோர் ஏமாற்றம் அடைந்தமை**

கிழக்கு நாட்டிலேயிருந்து ஒருவர் ஞானியரை சோதிக்கநினைத்து தனக்குப் பிசாசு பிடித்து விட்டதென்றும் அதை நீக்க வேண்டும் என்றும் கூறிக்கொண்டு வந்தார். அப்பொழுது ஞானியார் அதை ஞான திருஷ்டியினால் உணர்ந்து அவருக்கு நல்லபடிப்பினை படிப்பிக்க வேண்டும் என்று நினைத்தார். சிவகாமன் சின்னப்புவின் சந்தியில் உள்ள முன்னோரில் புயபல பராக்கிரமமுடைய விநாயத்தம்பி என்பவர் ஒருவர் இருந்தார். அவரைப் பார்த்து "ஏ விநாயத்தம்பி நீ பார்க்கும் ஒரு பேயும் இன்று வரும்" நீயும் ஆயத்தமாய் வா என்றார். அவரும் ஆயத்தமாய் வந்திருந்தார். பேய்க்காரரும் வந்தார்கள். ஞானியார் பேயைப் பார்த்தார். பேய் மும்முரமாக எழுந்தாடியது. ஞானியார் ஆடிக்களைக்க விட்டார். களைத்து விட்டாரென்பதை அறிந்த உடனே "விநாயித்தம்பி இந்தப் பேயை நீதான் பார்." என்றார் உடனே விநாயத்தம்பி தலைமயிரிலே அவனைப் பிடித்து நிலத்தில் தூக்கிப் போட்டு நாலு உழக்கு காலாலே உழக்கினார். சுவாமி நான் தெரியாது செய்த பிழையை பொறுக்க வேண்டுமென்று மன்னிப்புக் கேட்டு வந்த வழியே திரும்பிச் சென்றான். எல்லோரும் அன்பு மேலிட்டவர்களாய் இந்நிகழ்ச்சியைக் கேட்டுப் பக்தியில் மூழ்கினார்கள்.

**தண்ணீர் அற்ற கிணறு வற்றாக்கிணறு ஆனமை**

வட்டுக்கோட்டையில் ஒருவர் தனது வயலுள்ள ஒரு கிணறு வெட்ட வேண்டுமென்று வெட்டினார். அவர் வேலையாட்களைக் கொண்டு நெடுக வெட்டிவித்தும் தண்ணீர் காணவில்லை. கல்லும் பெரும் பாகர்க்கல்லையும் வெட்டுவது கஷ்டமாயுமிருந்தது. இதற்கு என்ன செய்யலாம் என்று ஞானியாரிடம் வந்து கேட்டார்கள். ஞானியார் எசமானை நினைத்து "இன்னும் ஒரு நாளைக்குள் வெட்டுங்கள் மேற்கு மூலையில் இருந்து ஒரு ஊற்று வரும் இரண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலாப்போட்டு இறைத்தாலும் வற்றாது" என்று கூறினார். அப்டியே அவர்கள் சென்ற ஒரு நாள் விட்டு எசமானே என்று அதன் கீழ் ஒரு கொத்தால் போட அதன் வழியாக வெட்டியவர்களையும் ஏற விடாமல் தண்ணீர் ஆறாகப் பெருகிறது. அந்தக் கிணறு இப்போதும் இரண்டு துலாப் போட்டு இறைத்தாலும் வற்றாக் கிணறாய் இருக்கிறது என்று பெரியோர் கூறுவர். இதுவும் ஞானியாரின் வாக்குப் பெற்றதனாலே நடந்த அற்புதமேயாகும்.

## ஞானியாரின் தீட்சை பெற்றவர்கள்

புன்னாலையில் ஞானியாரின் தீட்சை பெற்ற ஒருவர் இருந்தார். அவர் தன்னிடத்து வந்த நோய்களை நீக்கும்படி கேட்பவர்களுக்கு தன் வழக்கப்படியே தவறாது குடிக்கும் புகையிலையின் சாம்பலையெடுத்துக் கொடுப்பாராம். அது தீரா நோய்களெல்லாம் தீர்த்தது என்று பெரியோர்கள் கூறுவார்கள். இது இவ்வளவில் நிற்க ! ஞானியாரின் பொருள் பெற்ற அவருடைய மருமகராகிய ஆச்சியாவும் தங்கள் காலடி மண்ணினாலும் கைதீண்டிய விபூதியினாலும் ஓதிக்கொடுக்கும் வெற்றிலை நீ இவற்றினாலும் தீராத நோய்களையெல்லாம் தீர்த்தார்கள் என்பதை இன்றும் பலர் கூற நாம் கேட்டு பக்திப் பெருக்கமும் ஆனந்த மேலீடும் அடைகின்றோம். இது மாத்திரமல்ல அவருடைய பொருள் பெற்றோர் செய்த அற்புதங்கள் அளவிடற்கரியவாய்ப் பெருகியிருக்கின்றன.

## ஞானியாரின் வாக்கு

ஞானியார் தன்னுடைய அடியவர்களின் வீடுகளுக்குச் செல்வது வழக்கம். அப்படியே மாதகலில் இருந்த சுப்ப உடையாரவர்களைச் சார்ந்த அம்பலவாணர் வீட்டிற்கும் செல்வார். அங்கே அவருடைய சிறுபிள்ளை சிதம்பரம் அவரைத் தீண்டவரும் அப்பொழுது அவர் பெரியவரைத் தீண்டப்பிள்ளையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாதேயுங்கள் என்பார். உடனே ஞானியார் "சுப்ப இவள் உனக்குச்சமைக்கவோ எனக்குச் சமைக்கவோ வந்தவள்" என்றார் பின் குழந்தையை விடுங்கள் என்று அவர்களுக்குக் கூறினார். பிள்ளையவரின் காலிற் போய்த் தொட்டு விளையாடியது இவரின் வாக்கின்படியே சிதம்பரம் என்னும் இக் குழந்தை இவருடைய மருமகரும் மெய்யன்பருமாகிய விசுவநாதருக்கு மனைவி ஆகியது இக்குழந்தை அவருடைய வாக்கின்படியே தவறாது பிற்காலத்தில் எசமான் பணியிலேயே நின்றது.

## மறைந்த ஞானியாரின் குருவின் செயல் அக்கரையில் தோற்றல்

கீரிமலையில் கடலிலுள்ள வாயூறு தண்ணீரினுள்ளே "அப்பன் மாண்ட இடத்தில் மாளப்போகிறாயோ" என்று கூறிவிட்டுச் சித்துருவாய்ச் சென்ற குரு அக்கரையிலே ஒரு சிறிய வறிய வீட்டிலே போய்ப் பிராமண வேடம் தாங்கியதாய் எமக்கு இருக்க இடம் தாருங்கோ என்ற கேட்டாராம். அவர்கள் கொடுத்தார்கள். அன்று இராக்காலத்திலேயும் அங்கு இருந்த அக்குரு எனக்கு ஒரு ஆயுதம் தாருங்கள் என்று அவ்வீட்டுக் காரரைக் கேட்டார். அவர்கள் இவர் வரத்துப் போக்கராயிற்றே. இவரை நம்பி எப்படி ஆயுதத்தைக் கொடுக்கிறது. இவர் கொண்டு போய் விட்டால் என்ன செய்கிறது என்று கொடாது விட்டார்கள். அந்த வீட்டிலே இரவு தீச்சட்டி இருக்கிறது வழக்கம். அந்தத் தீச்சட்டியில் அவர் அங்கேயிருந்த வெற்றிலைப் பெட்டியிலிருந்த ஒரு பாக்குவெட்டியை எடுத்துப் புதைத்து விட்டார்.

அவர்கள் பாக்குவெட்டியைக் காணவில்லையென்று எங்கும் தேடினார்கள். வந்தவர் யாரோ தெரியாது திருடராயிருக்கவேண்டும் கொண்டுபோய் விட்டார்கள் என்று கூறினார்கள். பின்பு மறுநாள் நெருப்பு அள்ள நெருப்புச்சட்டியை எடுத்துக் கொட்டப் போனார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குள் இருந்து ஒரு தங்கப் பாக்குவெட்டி விழக்கண்டு இதை அப்பெரியவர் எடுத்து நெருப்புச்சட்டியில் வைத்தார் போலும் வந்தவர் ஒரு பெரியவராச்சே ஒப்பற்ற ஓர் குருவாயிருக்க வேண்டும் அல்லது முழுமுதற் கடவுளாயிருக்க வேண்டுமென்று எண்ணினார்கள். இவரிடம் ஏதாவது ஒரு பெரிய ஆயுதத்தைக் கொடுத்தோமில்லையே கொடுத்திருந்தால் எங்கள் வறுமையெல்லாம் அகன்றிருக்குமென்று நினைத்தார்கள். இதுவே குரு தன் வியாபகம் காட்டிய ஆனந்தல் என்று பெரியோர்கள் கூறுவார்கள். இப்படியான ஒரு வரலாறுமுண்டு. இதனை ஆன்றோர் கூறக்கேட்டிருக்கிறேன்.

### ஞானியாரின் மகனின் நிலை

ஞானியாரின் மகன் உலகப்பற்றிலே மிக்கவராயும் பிரபஞ்சவழியிற் புலனைச் செலுத்துபவராயும் தன் தந்தையாகிய கந்தஞானியாரைச் சாதாரண மனிதனும், தன் தந்தையுமென்று நினைப்பதேயல்லாமல் உண்மைப்பொருள் பெற்றவரென்றும் கடவுள் நிலையடைந்தவர் என்றும் எண்ணாதிருந்தமையால் ஞானியார் அவரைப் பார்த்து நீயாவது தேறு குருக்களாவது தீக்கடன் நீர்க்கடன் செய்ய எத்தனித்தால் அல்லாவிடின் கிரியை செய்யத் தெர்ப்பை எடுத்தால் உங்களுக்கு தவறாது பைத்தியம் வரும் என்று கூறினார்.

### மெய்யன்பர் சுவாமிநாதர்

தனக்கு மெய்யன்பனாய் இருந்த சுவாமி நாதனைத் தமது மகன் முன்னிலையிலேயே ஞானியார் அழைத்து சுவாமிநாதர் நீயே எனக்கு வேண்டிய தீக்கடன் நீர்க்கடன் செய்யவேண்டும் என்று கூறினார். இவர் தம் எசமான இட்டகட்டளை எப்போது வருமென்று எதிர்பார்த்திருந்தார்.

### ஞானியாரின் தேகாந்தம் சமாதியை விரும்பவில்லை

இஃது இவ் வளவில் நிற்க "கந்தன் இருந்த இடம் சிதம்பரம் கல்லுங் கவி பாடும்" என்று கூறிச்சுமார் 20 ஆம் ஆண்டு ஆடி மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14ம் திகதி தேகாந்தமானார் முன் 1770 எசமானிட்ட கட்டளையை எதிர்பார்த்திருந்த மெய்யன்பன் சுவாமிநாதரும் மற்றும் நாகேந்திர ஐயர் இன்னும் வேறுபல அன்பர்களும் உறவினர்களுமாகக் கொண்டு சென்று திருட்டித்தகனம் செய்தனர். பின்னர் அவருடைய அஸ்தியை ஒருவருக்கும் விடாது சொல்லி வைத்த மெய்யன்பர் சுவாமிநாதரே இருமட்குடங்களில் அள்ளிச் சேமித்துக் கொண்டுபோய் வைத்திருந்தார்.

## அரைப்படியில் அநேகருக்கு அமுதிட்டமை

இ∴து இவ்வளவிலிருக்க முன்னரே கூறப்பட்ட நாகேந்திர ஐயா பிராமணராயிருந்த போதிலும் மெய்ப்பொருளுக்கு அடிமைப்பட்ட உண்மைத் தன்மையினால் தேகாந்தத்திற்கு வந்து எல்லாம் முடிந்து வீட்டிற்குத் திரும்பும்பொழுது "ஸ்நானம் செய்ய விரும்புவோர் ஸ்நானம் செய்யலாம். என்னோடு வர விரும்புவோர் தன்னோடு வரலாம்" என்று கூறினார். அனேகர் அவரோடு சென்றனர். அவர் எல்லோரையும் ஸ்நானம் செய்யவிடாது தன்னுடைய இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். இதிலிருந்த ஞானிகள் தேகாந்தமானால் அதில் ஆசூளசம் இல்லை என்பது அறியக்கிடக்கின்றது. ஐயா இவர்களுக்கு அன்னமிட விரும்பி அம்மாவிடம் சென்று "இன்றைய தினம் எசமான் தேகாந்தமான தினம். இன்று நான் இவர்களெல்லோருக்கும் அன்னமிட விரும்புகிறேன். ஆயத்தமாயிருக்கின்றீரா" என்று அம்மாவை வினவினார் அம்மா, ஐயா! என்றும் போல் எசமானின் படி இருக்கிறது" என்று கூறினார். உடனே அவர் உள்ளே சென்று "எசமானே என்னைச் சோதிக்கிறீரா" என்று அழுது வழக்கப்படி கற்பூரம் கொழுத்தி எசமானுக்கு நிவேதித்துவிட்டு அன்பர்கள் எல்லோரும் தோண்டி எடுத்துப் பரிமாறினர்.

எல்லோரும் வேண்டிய அளவு உண்டபின் அவரும் அம்மாவும் உண்டார்கள். பின்பும் அந்தச் சருவத்தின் அரைப்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம் இருந்தது. அதை அப்படியே கொண்டு வந்து ஐயர் எல்லோருடைய சமூகத்திலேயும் வைத்து நடத்த விருத்தாந்தத்தைத் கூறினார். இது மணிமேகலை என்னும் நூலிலேயுள்ள அட்சயபாத்திரம் போல் இருக்கின்றது என்று எல்லோரும் இவ்வதிசயத்தைப் பார்ப்பவரும் கூறினார்கள். இதைக் கண்டோர் கேட்டாரெல்லோரும் சரீரம் நடுங்கி மெய் சிலிர்த்து மயிர்க்கூச்செறிந்து ஆனந்த பாஸ்பமாகக் கண்ணீர் சொரிந்தார்.

**ஞானியாரின் மகனின் நிலை 2**

பின்பு ஞானியாருடைய மகன் தாங்கொண்ணாத கொடிய நோய் மேற்கொண்டு சாகப்பிழைக்கக் கிடந்தார். அவருக்கு எல்லா இடங்களிலுமுள்ள சிறந்த வைத்தியர்களிடமும் சென்று வைத்தியம் செய்வித்தும் நோய் மாறவில்லை. அந்தக் காலத்திலே இணுவிலிலே ஒரு தெய்வ மேம்பாடுடைய பெண் நாவிலே நெருப்புத் தணல் வைத்துச் சாத்திரம் சொல்பவர் இருக்கின்றார் என்று கேள்வியுற்று அங்கே செல்வதெனத் தீர்மானித்துச் செல்லப் புறப்பட்டார்கள். போகும்போது ஞானியாருடைய மகன் அருணாசலம் அவருடைய பெண் ஆச்சியாவின் தம்பி விசுவநாதரும் (மூளாய்த் தம்பரும் ஆகக்கூடிச் சென்றார்கள். அங்கே சாத்திர இடத்திலே அனேக சனங்கள் இருந்தார்கள். இவர்களுடைய முறை வந்தவுடன் சாத்திரக்காரர்கள் மணீ முதலில் ஞானியாருடைய மகனின் மைத்துனரைப் பார்த்து "நீ முற்பிறப்பில் பிராமணர் இப்பிறப்பில் நீர் பிறவியை அறுக்கவே பிறந்திருக்கின்றீர்" என்று கூறிப் பின்பு ஞானியாரின் மகனைப் பாத்து "நீ உன்னுடைய அப்பனை அப்பன் என்று நினைக்கின்றாய், அப்படி நீ நினைக்கும் வரைக்கும் என்ன வைத்தியம், சாந்தி முதலியன செய்தாலும் உன் நோய் மாறாது நீ அப்படி நினையாமல் அப்பன் அப்பனல்ல அப்பன் தெய்வம் என்று நினைத்தால் அன்றே உன் நோயெல்லாம் ஆறும்:" என்று சாத்திரம் கூறினார். அவர்கள் இருவரும் சாத்திரத்தை கேட்டுக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வந்தார்கள். ஞானியாருடைய மகன் வீட்டிற்கு வந்தவுடன் மருந்துகள் எண்ணெய்கள் எல்லாவற்றையும் எடுத்தார்.

அவற்றோடு தன்னுடைய சாதகத்தையும் எடுத்தார். எல்லாவற்றிற்கும் நெருப்பைக் கொழுத்தினார். "என் அப்பனே என் எசமான் என் இறைவன். இதுவரையில் அழுந்தினேனே" என்று கண்ணீர் சொரிந்து அழுதார். அவருடைய நோய்களெல்லாம் சூரியனைக் கண்ட பனி போலப் பறந்தன. அவர் மூக்கிலே கையை வைத்துச் சாத்திரம் சொல்லும் ஞானம் பெற்றார். அவ்வப்போது ஓடும் சுவாசத்தைக் கொண்டு காரணகாரிய நிகழ்ச்சிகளைக் கூறுவர்.

**ஞானியார் மகனின் தேகாந்தம்**

இங்கிருந்து சிதம்பரம் போவதற்கு ஒரு கூட்டத்தினர் புறப்பட்டனர். அவர்களுள்ளே ஞானியாருடைய மகனும் ஒருவர் அவர் புறப்படும்பொழுது நாசியிலேயே கையை வைத்து சாத்திரம் பாாத்துவிட்டு இதிலே போவோர்களுக்குள்ளே ஒரு தக்க சவம் விழும் என்று கூறினார். அவரும் மற்றைய எல்லோரும் சிதம்பரம் சென்றார்கள். அப்படிச் சென்றவர்களில் சிதம்பரத்திலே மாணித்தது அவரே தான். இவர் இறந்த பின் ஞானியாரிடம் மெய்யன்பு நீங்காத வரும் ஞானியாரின் மகனின் மனைவியுமாகிய ஆச்சியா "எல்லோரும் போன சப்பா இன்று வரும் நாளை வரும் என்று கண்ணானன் போன சம்பாகடல் மேலும் தாமதமோ" என்று புலம்புவார். ஞானியாரின் தாயும் மகனும் கோயில் எனப்பெயர் பெறும் சிதம்பரத்திலேயே இறந்தார்கள்.

**கோயில் நிலை**

ஞானியாருடைய மருமகன் ஆச்சியாவும் மகள் தையல்முத்துவும் அவர்களுடைய பாகத் தோம்பிற்கு உரித்தாக, அவருடனிருந்த மருமகராகிய மூளாய்தம்பர் என்று அழைக்கப்படும் ஆச்சியாவின் தம்பியாகிய அம்பலவாணர் விசுவநாதரும் மறுபாகத் தோம்பிற்கு உரிமையாளராகி இவர்களெல்லாருக்கும் பாதுகாப்பாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராயிருந்தார், இவர்களின் மேற்பார்வையாளருமாகிய அம்பலவாண ரும் சுந்தரரும் இருந்தார்கள். தங்கள் மகள் சிதம்பரத்தை கந்தஞானியாரின் அடியாரும் மருமகளுமாகிய அம்பலவாணர் விசுவநாதருக்கு மணமுடித்து வைத்தார்கள். அராலியில் கந்தஞானியாரின் அடியவராயிருந்த விநாயகத்தம்பியின் மகனே அம்பலவாணர். அவருடைய மகனே சிதம்பரம் விசுவநாதரும் அவருடைய மனைவி சிதம்பரம் வேதநாயகம் என்னும் பெயரையுடைய ஆச்சியாவும் அவாவுடைய மகள் தையல் முத்துவுமாய்ச் சேர்ந்து "கந்தன் இருந்த இடம் சிதம்பரம்" என்னும் வாக்கின்படி செவ்வனே நடத்தினார்கள் கந்தஞானியாருடைய காலத்திலே அவருடைய மெய்யடியார்கள் அவரைப் பார்த்து "எசமானே நாங்கள் உமக்கு ஒரு வீடு கட்டித் தருகிறோம்" என்று கேட்டார்கள்.

அவர் அவர்களை பார்த்து "இது எனக்கு இப்போ போதும் இந்த நிலையத்தில் எட்டுக்கட்டு வீடு உண்டாகும்" என்பது அவருடைய வாக்கு இன்னும் அவர் இக்கோயில் நல்லாய் நடந்து சிறிதுகாலம் தேடுவாரற்றுக் காடாகிப் பின் ஒரு பிள்ளை பிறந்து வடமேற்கு மூலையில் இருக்கும் திரவியமும் எடுத்து நடேசரும் நான்கு வீதியும் உண்டாகி தேரும் ஓடும் என்பது அவருடைய மற்றோர் வாக்கு. இந்த வாக்குகள் நிறைவேறும் என்பது பூரண நம்பிக்கை.

அதற்கு அறிகுறிகள் தற்போது காணப்படுகின்றன. ஞானியாரின் அடியவர்கள் சிவக்குடிசையை ஆலயமாக அமைக்கத் தொடங்கியபோது முன்னரே கூறிய மெய்யன்பர் சுவாமிநாதர் தாம் சேமித்து வைத்திருந்த இரண்டு குட அஸ்தியையும் கொண்டு வந்தார். படியில்லாதற்காக மேலாம் சாட்குண்ணியமூர்த்தி சந்நிதானமென ஒரு சந்நிதானத்தை உண்டாக்கி அதற்குள் இரு கோவில்கள் அமைத்து அதற்குள் மூலஸ்தானத்தைப் படியற்றதாக்கி அம்மேடையுள் மெய்யன்பர் சுவாமிநாதர் கொடுத்த அஸ்தியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலய முகப்புத் தோற்றம்




ஆலய தீர்த்தக் கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கந்தஞானியாருடைய பாத அறை



சின்னகோவிலில் உறைந்திருக்கும் இலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவகாமி சமேத சிதம்பரநாதர் சிற்சபை




உட்கோயில் முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தஞானியரால் உபயோகிக்கப்பட்ட உடமைகள்



ஏடுகள், வாள்



பல்லக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதி செய்யும் நெய் விளக்கையும் மற்றைய குருமூர்த்தி நிலை குருமுத்திரை முதலிய குருமூர்த்தங்களையும் குருவின் பாதச்சுவடு வைத்து அதற்குப் பெரியகோயில் என்று பெயருமிட்டு அதற்குக் கிழக்கே சிவலிங்க ஸ்தலத்தையுண்டாக்கி அதற்குச் சின்னக் கோயில் என்று பெயரிட்டு பூசை தினந்தோறும் செய்து மார்கழி திருவாதிரை பத்து நாளும் உற்சவம் நடத்தியும் ஆனி உத்தரத்திற்கு பத்து நாளும் உற்சவம் நடத்தி வந்தார்கள். மார்கழியிலும் ஆனியிலும் திருவாதிரைக்கும் உத்தரத்திற்கும் குருபாத அபிஷேகங்கள் நடைபெற்றன.

இப்போது அவற்றிற்குப் பதிலாக நடேசர் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. பெரிய கோயிலில் இராப்பகலாய் நெய் விளக்கு வைப்பார்கள். இவ்வாலயத்தில் இரண்டு காலப் பூசையும் மார்கழி மாதத்தில் மட்டும் மூன்று காலப் பூசையும் நடந்து வருகின்றன. 1954 ம் ஆண்டு நடராசரும் வந்து உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. 1964 ஆம் ஆண்டு அமரர் பொன்னுத்துரை ஆசிரியர் அவர்கள் அவர்களுடைய தமையனார் செல்லத்துரை ஆசிரியரின் நினைலாகத் திருவாசக மடம் கட்டப்பட்டது. 1957 ஆம் ஆண்டு சுமார் மனோகர மணிசிவம் திருவாதவூரர் அவர்களினால் தேர் ஒன்று அமைக்கப்பட்டது. ஒவ்வொரு வருடத்திலும் ஆனித் திருமஞ்சனம் ஒன்பதாம்நாளும் மார்கழித் திருவெம்பாவை ஒன்பதாவது நாளும் நடேசர் தேரில் பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் கட்சியாகும்.

1977 ஆம் ஆண்டு அமரர் முத்தையாப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களால் இராசகோபுரம் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மேலும் இந்த இடத்தில் வருடத்தில் 6 நாட்கள் நடேசருக்கு அபிஷேகம் நடைபெறுகின்றன. சித்திரை மாதம் திருவோண நட்சத்திரம் ஆனி மாதம் உத்தர நட்சத்திரம், ஆவணி மாதம் பூர்வபட்ச சதுர்த்தசி, புரட்டாதி மாதம் பூர்வபட்ச சதுர்த்தசி, மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரம், மாசி மாதம் பூர்வ பகட்சத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர்த்தசி முதலிய தினங்களில் நடேசருக்கு அபிசேகம் நடக்கின்றது.

**பெரிய புராண ஏடு**

சிதம்பரத்திலே ஞானியார் இருக்கும்பொழுது அங்கு ஒருவருக்கு கழகண்ட மாலையென்னும் நோய் காணப்பட்டது. அதைப் பல வைத்தியர்கள் மாற்ற முயன்றும் முடியவில்லை. ஞானியார் விபூதியைப் போட்டுத் தடவ நோய் மாறிவிட்டது. உடனே அவர்கள் அவருக்கு வேண்டிய பரிசுகளெல்லாம் கொடுக்க முயன்றார்கள். அவர் ஒன்றையும் ஏற்க மறுத்து விட்டார். பின் அக்காலத்தில் அரும் பொருளாயிருந்த பெரியபுராண ஏடொன்றைக் கொடுக்கச் "சபாபதி வா" வென்று வாங்கிக்கொண்டு வந்தாரென்று அறியக் கிடக்கின்றது. அந்த ஏடு இப்பொழுதும் வைத்து வணங்கப்படுகிறது. கோயிலின் வடமேற்குப் பக்கத்தில் ஒரு மடம் கட்டி அருள்மிகு கந்தஞானியார் வைத்து அற்புதங்கள் செய்த குரு முத்திரை அவர் பாவித்த கட்டில் கதிரை போன்ற பொருட்கள் எல்லாம் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறையில் குரு முத்திரைக்கு வருடத்தில் இரண்டு முறை ஆறாவது ஆனி உத்தர தினம் மார்கழித் திருவாதிரைத் தினம் இரண்டு நாளும் அபிடேகம் செய்யப்படுகின்றன. விளக்கு தினம் வைக்கப்படுகின்றன.

ஞானியார் தேகாந்தம் அடைந்த தினமாகிய ஆடி 29 ஆங்கிலம் தமிழுக்கு ஆடி 14 இல் விசேட சங்காபிடேகமும் கடந்த ஐந்து வருடங்களாக நடந்து வருகின்றன. 1992 ஆம் ஆண்டு தொடக்கம் ஆனி மாதம் பதினொராம் நாள் திருக் கல்யாண வைபவமும் சிறப்பாக நடக்கின்றது.

1990 ஆம் ஆண்டு தொடங்கி மார்கழி மாதம் திருவாதிரை தினத்தன்று திருவாசக முற்றும் ஓதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சியாவிற்கும் விஸ்வநாதருக்கும் பின் 19ம் நூற்றாண்டு பின் பிற்பகுதியில் இருந்து இக் கோயில் வடபகுதியினரும் தென்பகுதியினரும் சேர்ந்தும் தனித்தும் கும்பாபிஷேகங்கள் திருத்தவேலைகள், புனர் உத்தாரணம் யாவற்றையும் சிறப்பாக செய்து வருகிறார்கள் 20ம் நூற்றாண்டு கடைசிப்பக்கம் முதல் இற்றை வரை இரு பகுதியினராலும் சிறப்பு அங்கங்களாக உள்வீதி, சுற்றுக்கொட்டகை, தாமரைப்பூ வாகனம் இரண்டாவது மணிக் கூட்டு கோபுரம் பெரிய கோவில் ( குருபாத அறை) வர்ணம் பூசி திருத்தல் வேலைகள் செய்தமை நடராசர் சிலையின் கூரை வேலைகள் செய்தமை பாதஅறை புனர்ருத்தராண செய்தமை, நடராசர், சிற்சபை, நூதனசாலை, முழுமையாக கட்டப்பட்டமை, மடப்பள்ளி திருத்தப்பட்டு களஞ்சியறை கட்டப்பட்டது. பழையலிங்கம் சிறு சேதாரம் ஏற்பட்டமையால் புதிய பழிங்குலிங்கம் வைக்கப்பட்டவை போன்ற திருப்பணிகள் இடம் பெற்றன இக் கோவிலில் தினமும் காலை, மாலை இரு வேளை பூசைகளும் நடேசர் அபிசேகங்களும் ஞானியார் நினைவு கூறும் நாளன்று சங்காபிஷேகமும் ஆனி, மார்கழி உத்தரம், திருவாதிரை, நாட் கால திருவாசக முற்றோதலும் இரு மாதங்களில் உற்சவ காலத்தில் அன்னதானமும் 9ம் நாள் தோறும் மறுநாள் தீர்த்தமும் நடைபெறும்.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.ச.இராசரத்தினம்
## (போஷகர் அராலி வணப்புர சிவன் தேவஸ்தான பரிபாலனசபை)
## அவர்கள் வழங்கிய
## அமரர் திரு.ச.விசுவநாதர்
## (ஆசிரியர் அவர்களின்
## வரலாற்றுச் சுருக்கம்

நீர்வளம், நிலவளம் செறிந்த செல்வம் கொழிக்கும் நாடாகிய ஈழவள நாட்டின் உச்சித்திலகம் என விளங்கும் யாழ்ப்பாண நகரின் மேற்றிசைக்கண் அமைந்த அராலியூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அமரர் திரு. சாட்குண்ணியமூர்த்தி சற்குருசின்னத் தங்கம் தம்பதிகள் செய்த உயர் தவப்பயனாக உத்தமபுத்திரர் அமரர் ஆசிரியர் திரு.ச.விசுவநாதர் உதயமானார். இவர் அவர் தம் பெற்றோரின் ஏகபுத்திரர்.

தமிழ், ஆங்கிலம் நன்கு கற்றுத் தேர்ந்தவர். தம் தாய் மொழியாகிய தமிழில் அதிக மோகங்கொண்டவராய்த் தமிழையே துருவித் துருவிக் கற்கும் விருப்புடையவராயினார். இவர் அராலி மேற்கு வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையிலும், நுகேகொட சென் யோவான் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்த்தவக் கல்லூரியிலும் ஆசிரியராக அமர்ந்து தம் கடமையைச் செவ்வனே புரிந்து பின்னர் இளைப்பாறினார். இளைப்பாற்றுச் சம் பளத்தையும் பெற்றுக்கொண்டார்.

இவர் கற்புக்கருங்கலமான செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்தார். இவர்கள் இல்லறாச்சிரம தருமங்களை நன்கு ஓம்பிக்காத்தவர்கள். இவர்களுக்கு சாட்குண்ணியமூர்த்தி, ஏகாம்பர மூர்த்தி என இரு புதல்வர்களுளர். கனிஷ்ட புத்திரராகிய ஏகாம்பரமூாத்த்தி பாடசாலை அதிபராகக் கடமையாற்றினார். அமரர் திரு.ச.விசுவநாதரவர்களின் இரு புத்திரர்களும் இறைவனடி சேர்ந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே முந்தையோர் கண்டமுறை" "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்," "தந்தை தாய் பேண்" என்னும் மூதுரைகளுக்கு அமைவாகத் தம் பெற்றோரைத் தெய்வங்களாகப் போற்றிப் பேணிக்காத்தவர் அமரர் திரு.ச. விசுவநாதர், இன்னும் "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை", "தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை" என்ற ஆன்றோர் வாக்கைச் சிரமேற் கொண்டவராய்த் தம் பெற்றோர் சொற்றவறாது பணிந்து கீழ்ப்படிந்து அவர்களின் பணிபுரிந்த உத்தம சீலர்.

ஞானமும் கல்வியும் நயத்த மூதறிஞர் இவர். தம் பெற்றோருக்கு ஓர் அறிவறிந்த மக்கட்பேறு குணம் என்னும் குன்றேறிய பண்புடையாளர். மெய்யறிவு படைத்த நனி சிறந்த மேதை, அன்பர்கள் அடியார்களைக் காணுந்தோறும் புன்னகை பூத்த முகத்தினராய் இன்சொற் பகர்ந்து இனியவை கூறி உபசரித்து அவர்களுடன் அளவளாவி மகிழ்வார்.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய தீக்குணங்களைக் களைந்தெறிந்த புனிதகரமான உள்ளம் படைத்தவர். சீரொழுகு சான்றோராகிய இவரது சினமானது விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல அக்கணமே ஆறிவிடும். அமரர் திரு.ச.விசுவநாதர் மாணிக்கவாசக சுவாமிகளுடைய மலர் வாய்ப் பிறந்த வாசகதேன் துளிகளாகிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் திருமுறைகளை நன்கு கற்றுத் தேர்ந்த பேரறிவாளர். இத்திருமுறைகளை ஓதும்போது அன்னாரின் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் சொரிய உடல் புளகிருதம் கொள்ளச் சிவானந்த சாகரத்துள் மூழ்குவார். ஞானியார் கோவிலிற் திருவாசகம் முற்றோதல் தினத்தன்று விபூதி, உருத்திராக் கதாரணராய் சிவவேடதாரிகள் போன்று காட்சியளிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் நன்மாணாக்கரும் மருமகனுமாகிய வித்துப சிரோமணி ந.ச.பொன்னம்பலபிள்ளை அவர்களின் அன்புக்குப் பாத்திரமான அராலியூர் விண்ணபுரம் ஸ்ரீமத் சிற்றம்பலம் ஆறுமுகம் அவர்கள் சிறந்த புராணகாவிய விற்பன்னர். கற்றோர் அவைக் களத்தாரால் நன்மதிப்புப் பெற்றவர். அன்னாரின் நன் மாணாக்கர். அமரர் திரு.க. நாகலிங்கம் அவர்களிடம் அமரர் திரு.ச.விசுவநாதரும், அமரர் ஆசிரியர் திரு.அ.துரைரத்தினமும் தானும் புராணகாவியங்களுக்கு உரை கற்றோம். இப்புராண காவிய உரை எம்முன்னோர் வழிவந்த முதுசொத்து. அமரர் சி.ஆறுமுகம் எமது பேரனாவார். அமரர் நாகலிங்கம் எமது சிறிய தந்தை. வித்துவசிரோமணி ந.ச.பொன்னம்பலம்பிள்ளை அவர்களும் சி.ஆறுமுகம் அவர்களும் சேர்ந்து ஆலயங்கள் தோறும் சென்ற புராண படனம் செய்வது வழக்கம். ஆறுமுகம் ஓர் சிறந்த இராகபாணி, அமரர்.ச.விசுவநாதர் புராண காவியங்களை நன்கு கற்றுத் தேர்ந்த செந்தமிழ் வித்தகர். அமரர் ச.விசுவநாதரும் அமரர் திரு.அ.துரைரத்தினமும் நானும் இணைபிரியாத் தோழமை பூண்ட பேரன்புடைய விழுமிய நண்பர்கள். நாங்கள் மூவரும் நட்புக்கு கபில, பரணர் போன்றவர்கள். நாங்கள் மூவரும் சேர்ந்து ஆலயங்கள் தோறும் சென்று புராணங்கள் படிப்போம்.

அமரர் திரு.ச.விசுவநாதர் விருத்தி உரை கூறுவதில் மிகவும் சிறப்பு வாய்ந்தவர். உரைசொல்லும்போது நவரத்தின கசிதமான செஞ்சொற்களை வாரிவாரிச் சொரிந்து உரை அலங்காரம் செய்வார். கேட்போர்க்கு இனிமைபயக்கும். உரைக்கு அமரர் ச.விசுவநாதர் எனின் மிகையாகாது. அ∴து அவருக்கு இறைவனால் அருளப்பெற்ற தற்பெருங் கொடையேயாகும். இவர் அமரர் திரு.த.துரைரத்தினத்தை யும், என்னையும் "ஐசே..." என்று கனிவாக அழைப்பார்.

அமரர் திரு.சவிசுவநாதரின் இல்லத்திற்கு மிகமிக அண்மையில் பூர்வீகம் கொண்ட பிரசித்தி பெற்ற ஒரு சிவாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கிறது. அதுவே அராலி மேற்கு ஞானியார் கோவில். திருவருள் பூத்து அடியார்களுக்குத் திருவருள் சிறந்தளிக்கும் தெய்வத்தலமும் இதுவே. அக்கோயிலில் திருத்தொண்டுகள் புரியும் பெருபேறு பெற்றவர் அமரர் திரு.ச.விசுவநாதர். இவ்வாலயத்தின் பரம்பரை பரம்பரையாக வந்த தர்மகர்த்தாக்களில் இவரும் ஒருவர். இவ்வாலயத்தில் காலத்துக்குக்காலம் விசேட தினங்களில் புராணங்கள் படிப்பார். அக்காலங்களில் படிப்புக் கேட்பதற்கு பக்தகோடிகள் வந்து சபை கூடுவர். படிப்புக் கேட்கும் பக்தகோடிகளுடைய சபைக்காட்சி கண்களுக்கு ஆனந்தமான விருந்தளிக்கும்.

அமரர் ஆசிரியர் திரு.ச.விசுவநாதர் பொதுநலச் சேவைகளிலும் மிக ஈடுபாடுடையவர். இவர் அராலி மேற்கில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம், வைத்திய சாலை என்பவற்றை தோற்றுவிப்பதற்கு உறுதுணையாயிருந்தார். இவர் தனது யௌவன காலத்தில் எவ்வாறு ஊக்கமும் ஆற்றலுமுடைய வராய் இருந்தாரோ அவ்வாறே தமது விருத்தாப்பிய காலத்திலும் உற்சாகமுடையவராயிருந்தார். நிமிர்ந்த உடல் நிலை சிறந்த நடை.

அமரர் திரு.ச.விசுவநாதரின் மருமக்கள் சா.கமலாம்பாள், ஏ.பத்மராணி ஆகியோரும் பேரப்பிள்ளைகள் சா.தேவரஜனா, சா.கமலமூர்த்தி, சா.குருமூர்த்தி, சா.எழிலரசி ஆகியோரும் இந்நூல் எழுதி வெளியிட வேண்டுமென்று மிக மிக ஊக்கமும் ஆர்வமும் உடையராயினர். கந்தஞானியார் உடைய சரிதையை அமரர் ஆசிரியர் அமரர் திரு.ச.விசுவநாதர் தம் தந்தையிடம் செவியாரக் கேட்டு தம் கையொழுத்துப் பிரதியாக புத்தகரூபமாக்கினார். தெய்வீகம் படைத்த இப்பெரியாருடைய வரலாற்றை வெளியிடு வதற்கு நாம் அனைவரும் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கிராமத்தில் ஞானோதயம் பெற்ற ஓர் பெரியார் வாழ்ந்து வந்தார். அப்பெரியாரே ஞானியார் என்று போற்றி அழைக்கப்படுவர். அவர் பேரறிவு படைத்த ஓர் தத்துவஞானி. தெய்வீகத் தன்மை வாய்ந்தவர் நோய்வாய்ப் பட்டவர்களுக்கு நோயை மாற்றி சுகப்பேறளித்தவர். அற்புதமான அதிசயமான செயற்கரிய செயல்களைப் புரிந்தவர். ஞானியாரது திருநோக்காலும், அருள் வாக்காலும் பேரருள் பெற்றவர்கள் பலருளர். அராலி தெற்கு சிற்றம்பலம் வைரமுத்து மணியகாரனுக்கு அருள் வாக்குப் புரிந்தவர் அத்திருவாக்கில் வைரமுத்து மணியகாரன் பூலோக நல்வாழ்வில் நனி சிறந்து விளங்கினாரென்பது பலருமறிந்த உண்மையே. ஞானியாரை தினம் தினம் தியானிப்பவர்கள் இம்மையில் சுகானுபோகங்களையும் மறுமையில் சுவர்க்கலோக நல்வாழ்வையும் பெறுவர்.

சிவபக்திமானாகிய அமரர் ஆசிரியர் அமரர் திரு.ச.விசுவநாதர் இறைவன் திருவடி நிழலை எய்திச்சிவானந்த நல்வழ்வைப் பெற்று உய்தியடைவாராக.

அன்பன்
ச.இராசரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.சி.மருதபிள்ளை ஆசிரியர் அவர்கள் வழங்கிய பாராட்டு

## நூலாசிரியர் ஒரு பரிபூரணமான மனிதர்

ஈழத்திருநாட்டில் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணம் அராலி மேற்குப் பகுதியில் விஜேயேந்திர முதலி மரபில் கந்தஞானியார் வழித்தோன்றலாக வந்தார் அமரர் உயர்திரு சற்குரு விசுவநாதர் ஆசிரியர் அவர்கள். அவர் வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்று மிகத்தரமான தேர்ச்சி பெற்றார் .ஆசிரியர் தேர்ச்சிபெற்ற பலர் அராலி மேற்கில் சைவமும் தமிழும் வளர்க்கத்தோன்றி வள்ளியம்மை ஞாபக வித்தியாலயத்தில் தனது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்து வித்தியாலயம் மேன்மையுடன் விளங்கப் பணிபுரிந்தார். வட்டுநகர் இராசவல்லவ முதலி வழிவந்த உயர்திரு கதிரவேற்பிள்ளை தம்பதிகளின் அருந்தவப் புதல்வி செல்லம்மாவை இல்லறத் துணைவியாக திருமணம் செய்தார்.

"மங்கலம் என்ப மனை மாட்சி மற்றதன்
தன்மலம் தன்மக்கட் பேறு"

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருவாய் மொழிந்த இலக்கியமாக அவர்கள் இல்வாழ்க்கை சிறந்து விளங்கியது. இல்வாழ்வின் பயனாக சட்குரு புண்ணியமூர்த்தி, ஏகாம்பரமூர்த்தி என்னும் இரு புதல்வரைப் பெற்றுப் பேரானந்தம் அடைந்தார்.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றிவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்ற திருவள்ளுவர் வாய் மொழிக்கிணங்கத் தம் புதல்வர்களுக்கும் நல்ல கல்வி கற்பித்தார். அவர்களின் இளைய புதல்வர் ஏகாம்பரமூர்த்தி ஆசிரியத் தொழிலின் மேன்மை பெறச் செய்து அதிபராக்கினார். தம் மக்களைப் போலவே பேரப்பிள்ளைகளையும் கல்வியில் முதல் இடம் பெறச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் பேரானந்தம் அடைந்தார். அதுபோலவே தம்மிடம் கற்ற பிள்ளைகளையும் மேன்மைபெறச் செய்தார். அவர் வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயத்தோடு நில்லாது நுகெகொட சென். யோவான் கல்லூரியிலும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்பித்து மாணவர் வளம்பெற வழிகாட்டினார்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

என்ற தமிழ் அன்னை ஒளவையாரின் இரு மொழிகளையும் தமது இலக்கியமாகக் கொண்டு வாழ்ந்தார். கந்தஞானியார் கோயில் வளமாக நடைபெற வழிகாட்டினார். அதுபோலவே எல்லாக் கோயில்களுக்கும் சென்று வழிபாடு செய்து மற்றவர்களுக்கு வழி காட்டினார்.

அவர் ஒரு பரிபூரணமான மனிதர். கந்தஞானியார் மரபில் தோன்றிய பெருமையோ ? என்னவோ நாங்கள் எல்லாம் குருவாகப் போற்றி வணங்கும் ஞானியாக எங்கள் முன் காட்சியளித்தார். அவர் பன்னிரு திருமுறைகளிலும் பதின்னான்கு சாஸ்திரங்களிலும் பதினென் புராணங்களிலும் நீந்தி விளையாடினார். பாட்டும் பயனும் என்ற கலைக்கு தனிப்பெரும் தலைவராக விளங்கினார்.

அவர் பயணம் செய்யாத ஆலயங்கள் இல்லையென்றே சொல்லலாம். திருவாசக முற்றோதல் என்ற பணியைத் தம் ஆலயத்தில் ஆரம்பித்து வைத்து ஏனைய ஆலயங்களுக்கும் வழிகாட்டினார். 1911 ஆம் ஆண்டு ஆடி மாதம் 14 ஆம் நாள் கந்தஞானியார் சிவபதம் அடைந்த தினம் எனப்போற்றி வணங்கும் திருநாளில் தோன்றிய அவர் 1993 கார்த்திகை மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் 1 மணி 45 நிமிடம் அளவில் இறைவன் திருவடி அடைந்தார். அவருடைய ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்தனை செய்வோம்.

**இங்ஙனம்**
**சி.மருதபிள்ளை**
**ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DR.க.இளங்கோஞானியார்
### வழங்கிய
## அணிந்துரை
### முதலாம் பதிப்பிலிருந்து

சைவர்களைப் பொறுத்தவரை ஆன்மீக ஈடேற்றத்திற்கு கோவில ் வழிபாடு என்பது மிக முக்கியமானதென்று இதனால்தான் சிவஞானபோதம் அருளிய மெய்கண்டதேவர் தமது நூலில் இறுதியடியில் "ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" என்று அருளியுள்ளார்.

எல்லாவிடத்தும், எங்கும் பரந்தும், ஓருருவம் இன்றியும் உள்ள எங்கள் இறைவன் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக எழுந்தருளியிருக்கும் ஆலயங்களை நான்காக வகைப்படுத்தலாம்.

1. சுயம்புவாக தோன்றி பல அற்புதங்களுக்குக் களனாக விளங்கி, இடங்களில் அமைந்த திருத்தலங்கள்.

2. புராண இதிகாச அபத்தம் பெற்று அல்லது அருள்மிகு ஞானிகளால் பாடல் பெற்று மக்கள் மனத்தில் உயர்ந்த திருத்தலங்கள்.

3. அரசரும், ஞானிகளும் பிற அடியார்களும் தமது இறையன்பை வெளிப்படுத்தவும், குடிமக்கள் வழிபடுவதற்காகவும் கூட்டிய பெரும் கோயில்கள்.

4. ஞானிகள் வாழ்ந்து, இறை பூசை செய்து பல அற்புதங்கள் நடத்தி அவர்கள் சமாதி அடைந்த இடங்களில் அமைந்து விளங்கும் திருக்கோயில்கள்.

இது தவிர கோயில்களின் அமைப்பு முறையைப் பொறுத்து ஆகம விதிக்கமைந்த கோயில்கள், ஆகம விதிக்கமையாத கோயில்கள் எனவும் வகைப்படுத்தலாம். ஈழநாட்டிலே மிக பிரபல்யம் வாய்ந்த புண்ணிய திருத்தலங்கள் பல இரண்டாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையைசேர்ந்தவை. உதாரணமாக நல்லூர், கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் போன்றவை. இக் கோயில்களின் வணக்க முறையும் சில சம்பிரதாயங்களின் படியே இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலிலே 18 ஆம் நூற்றாண்டளவில் அராலி மேற்கு வட்டுக்கோட்டை பிரதேசத்திலே வாழ்ந்த மகான்களில் ஒருவராகிய அருள்மிகு கந்தஞானியார் அவர்களது வரலாறும் அவரின் அஸ்தியம் சின்னங்களும் கொண்டு அமையப்பெற்ற அராலி மேற்கு, மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதான வரலாறும் விபரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் சொன்னது போல இவ்வாலயம் ஆகம விதிக்கமையாவிடினும் அருள்மிகு கந்தஞானியார் அவர்கள் வாழ்ந்து சிவபூசையும், அற்புதங்கள் பலவும் செய்தமையால் புனிதத்தன்மை படைத்து விளங்கும் திருக்கோயிலாகும்.

நூலில் குறிப்பிட்டுள்ளது போல நூலாசிரியர் மேற்படி வரலாற்றைச் செவிவழிக் கதைகளூடாகவே தொகுத்துள்ளார். ஒரு ஆசிரியர் என்ற முறையில் தான் எழுதிய வரலாற்றுக்குரிய மூலங்களை சில வேளைகளில் எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட முடியாதது என்று தெரிந்திருந்தும், அவர் ஒளிவு மறைவின்றி தெரிவித்திருப்பதும் நமது நூலில் மேற்படி வரலாற்றை எழுதத் தூண்டியது இறைவன் திருவருளே என்று உருகுவதும் ஆசிரியரின் உண்மைத் தன்மைக்கு மறுக்கமுடியாத சான்றுகள்.

பெரியபுராணம் தொடக்கம் இன்று வரையுள்ள அருள்மிகு ஞானியாரது வாழ்வும் அவர்கள் அற்புதச் செயல்களும் எமது சிற்றறிவால் ஆராய முடியாதவை. ஆனால் அதிசயித்து இன்புறத்தக்கவை எண்ணுதொறும் எண்ணுதொறும் உள்ளம் புளகாங்கிதம் அடையச் செய்பவை.

ஆசிரியர் இவ்வுணர்வினை நூல் பரக்க உரைத்துள்ளார். ஆசிரியருக்கும் இவ்வாலய அடியார்களுக்கும் குருபாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டிலும் திருவாசகத்திலும் உள்ள ஈடுபாடு நூல் முழுமையும் பரவிக் கிடக்கிறது. அவ்வுணர்வு நூலாகப் படிக்கின்ற ஒவ்வொரு வாசகருக்கும் ஏற்படும் என்பது திண்ணம்.

இன்றுவரை சிறப்புடன் விளங்கும் அராலி மேற்கு மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானமும் அங்கு இடம்பெறும் குருபாத விளக்க வழிபாடும் அருள்மிகு கந்தஞானியார் அவர்களின் திருவிளையாடல்களை என்றென்றும் நிலைநிறுத்தும் ஆதாரங்களில் மிக முக்கியமானவையாகும். இக்கோயிலிலே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள அவரது உடமைகள் பாதவடி, கைப்பிரம்பு, பல்லக்கு, கட்டில், கதிரை.

நூலாசிரியர் குறிப்பிட்டுள்ள சில சம்பவங்களுக்கும் இன்றளவும் சான்று பகர்கின்ற மேலும் பண்டுதொட்டு தமிழர்களிடம் இருந்து வரும் வணக்க முறைகளில் ஒன்றான ஞானிகளது உடமைகளை ஞானிகளாகவும், சிவனாகவும் கருதி வழிபடும் முறைக்கு இது மேலும் வலுச் சேர்க்கிறது.

அருள்மிகு ஞானியார் அவர்களின் மேற்படி சின்னங்கள் அனைத்தும் அவரது ஆஸ்திக்கு மேல் அமைந்துள்ள பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பெட்டியின் உள்ளே வைக்கப்பட்டு அவரது அடியார்களால் தினமும் நெய் விளக்கேற்றி வழிபட்டு வரப்படுகிறது.

வருடந்தோறும் தமிழுக்கு ஆடிமாதம் 11 ஆம் திகதி அன்று ஆலயத்தில் அவரின் குருபூசை தினமாக சங்காபிஷேகம் இடம்பெற்று வருகிறது.

இவை நூலாசிரியர் கூறிய வரலாறு இன்றுவரை இடையூறின்றி இறையருளால் தொடர்ந்து பேணப்பட்டு வந்திருப்பதைக் காட்டுகிறது. தொடர்ந்து இப்பணியை இந்நூல் நிறைவேற்றும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அவ்வகையில் இறையருளால் கிடைக்கப்பெற்ற இந்நூல் காலத்தின் தேவையாகும்.

அருள்மிகு ஞானியார் அவர்கள் வாழ்ந்த காலம் சம்பந்தமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் அல்லது ஒல்லாந்தர் காலம் எனக் கூறி அமைத்த போதும் அதற்கு ஆதாரமாக அமையக்கூடிய பிறசாதனம் எதையும் அவர் குறிப்பிடவில்லை. ஆனால், ஆசிரியர் குறிப்பிட்ட கால வரையறையை உறுதி செய்யத்தக்க வகையில் நூலிலே குறிப்பிடப்பட்டிருக்கும் அம்பலவாணர் விசுவநாதர் என்பவரின் சாதனம் ஒன்று கிடைத்தள்ளது. எனவே அதனை இணைத்து இவ்வரலாற்றை ஆராய்தல் சாலப் பொருத்தமாகும்.

இந்நூலிலே ஆசிரியர் குறிப்பிட்டுள்ள அம்பலவாணர் விசுவநாதர் என்பவர் தமது வயது முதிர்ந்த காலத்தில் மேற்படி கோயிலை பரிபாலித்து வருவது தொடர்பாக 1847 ஆம் ஆண்டு ஒரு சாதனை பிறப்பித்து இருக்கிறார். (பக்கம் 1) குறிப்பிட்ட அம்பலவாணர் விசுவநாதர் தமது சகோதரி வேதவனம் என்பவரை அருள்மிகு ஞானியார் அவர்களது ஒரே மகள் அருணாசலம் என்பவருக்கு மணம் செய்துள்ளார் என்பதனை இந்நூலில் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது.

மேற்படி சாதனம் அவரது முதிய காலத்திலேயே செய்யப்பட்டதொன்று. மேற்படி சாதனத்திலேயே சொல்லப் பட்டிருக்கின்றபடியால் அவர் 18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளில் பிறந்திருக்கலாம் என நாம் கொள்ளலாம். இவர் தனது சகோதரியை அருள்மிகு ஞானியார் அவர்களின் மகனுக்கு மணமுடித்து கொடுத்திருப்பதால் அருள்மிகு ஞானியார் அவர்கள் இவருக்கு ஒரு தலைமுறை முந்தியவர் ஆவார். எனவே, அருள்மிகு ஞானியர் அவர்கள் காலத்தை 18 ஆம் நூற்றாண்டின் முன் அல்லது நடுப்பகுதி எனல் பொருத்தமானதே.

குறிப்பிட்ட இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் ஆட்சி செய்தனர் என்பதும் அவர்கள் தொடக்க ஆட்சிக்காலத்தில் சைவசமயத்தை சேர்ந்தவர்களுக்கு பல்வேறு துன்பங்களை விளைவித்தனர் என்பதும் பிறர் எழுதிய யாழ்ப்பாண வரலாறுகளில் இருந்தும் வேறுபல வரலாற்று சான்றுகளில் இருந்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியலாம். எனவே, இந்நூலில் குறிப்பிட்டுள்ள அருள்மிகு ஞானியர் அவர்களின் பேரன் சங்கரப்பிள்ளை அவர்களது வரலாறு மேற்படி காலத்தில் நிலவிய சமய சூழலைப்பற்றி ஆய்வு செய்வோருக்குப் பயன்தரத்தக்க சான்றுகளில் ஒன்றாகக் கொள்ளத்தக்கதாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியர் நூல் முழுவதிலும் சம்பவங்கள் நடைபெற்ற இடம் அதன் இப்போதைய நிலை (ஆசிரியர் நூல் எழுதிய காலமாகிய 1950 களில்) என்று விரிவாகக்ககுறிப்பிட்டு இருப்பது நூலை வாசிப்போர் விளங்கிக் கொள்ளவும் புரிந்து கொள்ளவும் பேருதவி புரிவதாகும். நூலில் குறிப்பிட்ட இடங்களில் கூட செவி வழிக்கதைகள், அடையாளங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் நூலில் குறிப்பிட்டபடியே இருப்பது நூலுக்கு மேலும் வலுச்சேர்ப்பதோடு பிற ஆய்வாளருக்கு உதவக்கூடியதாகும்.

ஆக மொத்தத்தில் நூலாசிரியரின் அயராத முயற்சியும் அருள்மிகு ஞானியாரின் திருவருளும் இவ்வுன்னத வரலாற்றை உரியமுறையில் வெளிக்கொணர்ந்து எமது வருங்கால சந்ததியினரும் பயன்பெறக்கூடிய வகையில் செய்துள்ளமை யாம் நினைத்து நினைத்து இன்புறத்தக்கது.

எல்லாம் வல்ல அருள்மிகு ஞானியார் ஆசிரியரின் ஆன்ம சாந்திக்கும் அவர் சந்ததியின் நல்வாழ்வுக்கு அருள் புரிவாராக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணர் விசுவநாதர்
# (மூளாய் தம்பர்)
## அவர்கள் எழுதிய
# கோயிலைப் பற்றிய உறுதி

இணைப்பு 1

இல : 1882

விண்ணப்பம் $\frac{888}{8.4\ 58}$

அராலி மேற்குக்குடி அம்பலவாணர் விசுவநாதராகிய நான் 1817 ஆண்டுக்கு முன்னாக எனக்கும் எனது சகோதரி அருணாசலம் கைம்பெண் வேதவனத்திற்கும் அருணாசலம் மகள் தையல் முத்துவிற்கும் முதுசமாயுடைய காணி அராலி மேற்கினை விநாயகர் கொற்றரில தோம்பு கலட்டிவளவு ப.நி.இ.பதினாறையும் 1829 மார்கழி மீ. 5 நொத்தாரிஸ் சி.கயிலாயர் மகதாவில 8ம் புத்தகம் 189 ம் இலக்கத்தில் பெயருக்கு முடித்த அறுதியுறுதிப்படி எனது கொள்விலையாட்சியான காணி மேற்படி அராலி மேற்கினை பேரம்பலம் பெண் முதலிநாச்சிபேரில் தோம்பு கலட்டி 9 இல என்பதையும் சொல்லப்பட்ட வேதநாயகத்துடையதும் தையல் முத்துவுடையதும் சம்மதிப்புடன் ஓரடையாகச் சேர்ந்து மொத்தம் பரப்ப இருபத்தைந்தாக்கி அதில் நானும் சொல்லப்பட்ட வேதநாயகமும் தையல் முத்துவுமாக மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானமென்ற வழக்கப்படுகின்ற சிவாலயத்தை யுண்டாக்கிய தன் பின் 1847 ம் ஆ வைகாசி 24 ம் திகதி நொத்தாரிஸ் சி.கயிலாயர் முகதாவில் நானும் எனது பெண்சாதி சிதம்பரமும் அவர்களிருவருமாக மேற்சுட்டிய காணி முழுமையும் சொல்லப்பட் மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்துக்குத் தர்ம சாதனம் செய்திருக்கிறபடியால் சொல்லப்பட்ட மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்திலும் அதிலடங் கியவை அனைத்திலும் நான் சரிஅரை வாசிக்குச் சொந்தக்காரனாகவிருக்கிறபடியாலும் சொல்லப்பட்ட வேதனவனமும் தையல்முத்துவும் மற்றரைவாசிக்கச் சொந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரராகவிருப்பதால் அவர்களிருவரும் ஒரு பகுதியாகவும் நானும் மறு பகுதியாகவும் நாங்களிரு பகுதியாரும் எங்களிலிணங்கி மேற்படி மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானம் அமைக்கப்பட்டிருக் கின்ற மேற்குறித்த கலட்டி பரப்பு இலட்சம் 25 கோவிலும் செய்பயிர் வான்பயிரும் கிணறுகள், கேணிகள், வீடுகளும் இதற்கெல்லை கிழக்கு றோட்டு, வடக்கும் தெற்கும் ஒழுங்கை மேற்கு மேலால் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்திற்குரிய காணியும் ஒழுங்கையும் இந்த வெல்லைக்குட்பட்ட நிலத்தில் உண்டாக்கப் பட்டிருக்கின்ற மேற்சுட்டிய சந்நிதானத்திற்கு வடபாகத்தை நானும் மேற்படி சந்நிதானத்திற்கு தென்பாகத்தை அவர்களும் குடியிருந்து ஆட்சி செய்து குறித்த சந்நிதானத்தைப் பராமரித்து நடத்தி வருகிற படியாலும் சொல்லப்பட்ட சந்நிதானத்துக்கு ஆக வேண்டிய சகல செலவுகளையும் நாங்களிரு பகுதியாரும் அவரவர் தனது தனது பிரயாசைப்படி சேகரித்து தான் தான் சேகரித்தவைகளைத் தான்தானே தன் வசத்திலும் ஆட்சியிலுமே வைத்து இது வரையும் ஆட்சி செய்து குறித்த சந்நிதானத்தையும் பராமரித்தும அனுபவித்தும் வருவதாலும் எனது சொந்தப் பணத்தைக் கொண்டு சொல்லப்பட்ட மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்துக்கு 1847 ஆண்டு புரட்டாதி மீ 24ந் திகதி அராலி மேற்கிறையில் கலட்டி நில இலாட்சம் இரண்டரையையம் அறுதியாக விலைக்குக் கொண்டு விட்டிருக்கிறபடியாலும் மேற்படி 1850 ம் ஆண்டு வைகாசி மாதம் 11ம் திகதி நானும் எனது பெண்சாதி சிதம்பரமும் எங்கள் சீதன ஆட்சி மேற்படி அராலி தென்கிறையில் உரைதி பரப்பு நெல் இல இருபத்தொன்றேகாலையம் தர்மசாதனம் செய்திருக்கிற படியாலும் இவ்வாதனங்களையும் மேற்படி 1811 ஆ வைகாசி மீ 10ம் திகதியிலும் மேற்படி 1870 ஆ கார்த்தரிகை மீ 1 திகதியும் மேற்சுட்டிய மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதானத்துக்கு முடிந்த உறுதிகளிற் கண்டிருக்கிற காணிகள் மேற்படி அராலி தெற்கு இறை உளாத்தி நெல் இலா எட்டையும் மேற்படி வட்டு மேற்கினை அந்திரான் நெல் இலா பதினாறையும் ஆக மேற்காட்டிய ஆதனமனைத்தையும் தான்தானே யிதுவரை யாட்சி செய்து வருமானங்களை யெடுத்துக் குறித்த கோவிலுக்குஞ் செலவிட்டு அனுபவித்து வந்த படியாலும் இப்போது மேற்சுட்டிய மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்தையும் அச்சந்நிதானத்துக்கு எனது சொந்தமாய் விடப்பட்ட ஆதனங்களையும் பிறரால் குறித்த சந்நிதானம் நடைபெற்று வருவதற்கும் யோகமாயிருப்பதற்கான என் வசனத்தில் ஒப்பிக்கப்பட்ட ஆதனங்களையும் இவ்விதம் மேற்காட்டியபடி சொல்லப்பட்ட மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்தில் அரைவாசிக்கு நான் சொந்தக்காரனாகவும் அவ அரைவாசிக்குச் சொந்தக் காரனாக விருப்பதால்

அச்சந்நிதான பராமரிப்பில் குறித்த சந்நிதானத்திற்கு செலவுக்காக வேண்டிவைகளில் என் பங்குப்படி செலவிட வரும் செலவுகள் பலவுக்கமாகவும் இப்போது மேற்காட்டிய சகல ஆதனங்களும் என் வசத்திலும் ஆட்சியிலும் அனுபவத்திலுமிருக்கிற படியாலும நானிப்போது வயோதிபனாயிருக்கிற படியாலும் எனக்குப் பின் இவைகளைப் பராமரித்து நடத்தி வருவதற்காக வேண்டிய நியமஞ் செய்து வைக்க வேண்டியது அவசியமாயிருப்பதாலும் எனது மூத்த மகனாகிய அராலி மேற்குக் குடி விசுவநாதர் தத்துவச் சிவஞானப்பா எனக்குதவியாய் இப்போது குறித்த சந்நிதானத்தை அடுத்து காரியங்களைப் பார்த்து நடத்தி வருகிறபடியாலும் அவரை இப்போது என்னுடனும் எனது சீவனுக்குப் பின் இதன்பின் நான் கற்பிக்கிற படியம் பராமரிப்புக் காரணமாக விருக்கும்படி நியமனம் செய்ய விரும்புகிற படியாலும் இத்தால் சகலரும் அறிய வேண்டியது சொல்லப்பட்ட அபாவாணர் விசுவநாதராகிய நான் எனது மூத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனாகிய அராலி மேற்குக்குடி விசுவநாதர் தத்துவச் சிவஞான்பபாவிற்கு மேலாம் சாட்டுண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானப் பராமரிப்புத் தந்து உறுதி முடித்துக் கொடுத்தாவது முதலாவது சொல்லப்பட்ட மேலாம் சாட்டுண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்தையம் அதிலடங்கியவைகளையம் எனக்குரிய அரைவாசி உருத்திற்காகவும் அரைவாசி உரித்தின் பேரால் குறித்த சந்நிதானத்தின் பேருக்கு என்னாலும் என் மூலமாய்ப் பிறராலும் கொடுக்கப்பட்டிருக்கிறவையும் அசைவுள்ளவையும் அசைவற்றவையும் இனி மேலலதற்குரிய தாக வருபவைகளுக்குமான சகல ஆதனங்களையும் குறித்த சந்திதானத்தையடுத்த எவ்வகைக் காரியங்களையும் நான் செய்து வருகிற குருபூசையையும் சொல்லப்பட்ட விசுவநாதர் தத்துவச் சிவஞானப்பா என்னுடன் ஒருமித்தும் தனித்தும் நடத்தியம் நடப்பித்தும் ஆட்சிபெற்றும் பராமரித்தும் அனுபவித்தும் வரவேண்டியது.

இரண்டாவது எனது சீலனுக்குப்பின் சொல்லப்பட்ட விசுவநாதர் தத்துவச் சிவஞானப்பா தானெ துயதி'டப்படி குறித்த மேலாம் சாட்டுண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்தையடுத்த காரியமனைத்தும் என்னைப்போல நடத்திப் பராமரித்து வரவேண்டியது.

மூன்றாவது சொல்லப்பட்ட விசுவநாதர் தத்துவச் சிவஞானப் பாவுடைய சீலனுக்குப் பின் எனது ஆண் சந்ததியில் மூத்தவரும் சங்குணமும் சிவபக்தி மேலீட்டியவரும் தகுதியுள்ள வருமானமாயிருப்பவர் சந்ததி சந்ததியாய்ப் பராமரித்து வரவேண்டியது.

இவ்விதம் மேற்காட்டி மேலாம் சாட்குண்ணியமூர்த்தி சந்நிதானத்தையடுத்து சகல காரியங்களையும் என்னைப்போலச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்ட விசுவநாதர் தத்துவச் சிவஞானப்பாவும் மேற்காட்டியபடி எனது ஆண் சந்ததியாரும் தலைமுறை தலைமுறையாகப் பராமரித்து அனுபவித்து வரும்படி இத்தால் கற்றித்து எனது முழுத் தத்துவமும் கையளித்து இந்தத் தத்துவ உறுதியெழுதிக் கொடுத்தேன்.

இதற்குச் சாட்சி அராலி மேற்குக் குடி இராமநாதர் தியாகராசா வண்ணார்பண்ணைக்குடி அருணாசலம் தில்லையம்பலம் . இவர்கள் சாட்சிகளாக வண்ணார்பண்ணையில் 1842 ம் ஆண்டு ஆனி மீ 11 ம் திகதியிலிதுபோலாகிய மூன்று பிரதிகளில் எனது கையொப்பம் வைத்தேன்.

சாட்சி .இ.தியாகராசா (ஒப்பம்)
சாட்சி அ.தில்லையம்பலம் (ஒப்பம்)

க.சீவரத்தினம் (ஒப்பம்)
(அ.சீவரத்தினம்)
பிரசித்த நொத்தாரிஸ்

மேலே கண்டிருக்கினற சாதனத்தில் சொல்லப்பட்ட அம்பலவாணர் விசுவநாதருக்கு யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு அருணாசலம் சீவசரத்தினம் ஆகிய என் முன்னாலதிற் கையொப்பம் வைத்திருக்கிற அராலி மேற்குக்குடி இராமநாதர் தியாகராசா வண்ணார்பண்ணைக் குடி அருணாசலம் தில்லையம்பலம் இவர்கள் முன்பாக வாசித்து விளங்கப்படுத்தப்பட்டதென்று சொல்லப்பட்ட அம்பலவாணர் விசுவநாதரை மாத்திரம் என்கருத் தெரியும் என்றும் சாதனத்திற்கு சொல்லப்பட்ட அம்பலவாணர் விசுவநாதரும் சொல்லப்பட்ட சாட்சிகளும் என் முன்பாகவும் அவர்களிலொருவருக் கொருவ முன்பாகவும் வண்ணார் பண்ணையில் 1842 ம் ஆ.ஆனி மீ 11ம் திகதியில் ஒரே சமயத்தில் கையொப்பம் வைத்தார்களெனவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்ட நொத்தாரிஸ் ஆகிய நான் இதைக் கொண்டு அத்தாட்சிப்படுத்துகிறேன். இதன் இணைப்பிரதி ரூபா 15 மூலப்பிரதி ரூபா 1ம் கொண்ட முத்திரையைக் கொண்டிருக்கிறதென்றும் அம் முத்திரைகள் நான் கொடுத்து ஒட்டியதென்றும் இன்னுமுறுதிப்பண்ணி அத்தாட்சிப்படுத்துகிறேன்.

அத்தாட்சிப்பண்ணிய திகதி 1 42 ஆனி 11ம் திகதி

அ.சீவரெத்தினம் (ஒப்பம்)
அ.சீவரெத்தினம்
பிரசித்த நொத்தாரிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு 2

இணைப்பு 2 ல் தரப்பட்டுள்ள சாதனத்தின் படி அராலி மேற்கு மேலாம் சாட்குண்ணியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்தில் வடக்கு அரைப் பாகத்திற்கும் அறங்காவலராக காலத்துக்கு காலம் தொண்டு செய்தவர்களின் பட்டியல் பின்வருமாறு

1வது அறங்காவலர் அம்பலவாணர் விசுவநாதர் (19ம் நூற்றாண்டு)

2வது விசுவநாதர் மகன் தத்துவ சிவஞான்பா (19ம் நூற்றாண்டு )

3வது தத்துவ சிவஞானப்பா மகன் ஞானத்துரை (19ம் நூற்றாண்டு )

4வது தத்துவ சிவஞானப்பா மகன் முத்தையாபிள்ளை (20ம் நூற்றாண்டு)

5வது 1வது அறங்காவலர் விசுவநாதர் மகன் மனோன்மணி சிவத்தின் மகன் சங்கரப்பிள்ளை (20ம் நூற்றாண்டு)

6வது 1வது அறங்காவலர் விசுவநாதர் மகன் சாகுண்யமூர்த்தியின் மகன் சற்குரு (20ம் நூற்றாண்டு)

7வது 4வது அறங்காவலர் முத்தையாபிள்ளையின் மகன் பொன்னுத்துரை (20ம் நூற்றாண்டு)

8வது 6வது அறங்காவலர் சற்குருவின் மகன் விசுவநாதர் (1993 வரை)

9வது 3வது அறங்காவலர் ஞானத்துரையின் மகன் விசுவநாதனின் மகன் கந்தசாமி (1994 வரை)

10வது 5வது அறங்காவலர் சங்கரப்பிள்ளையின் தம்பி பஞ்சாட்சர மூர்த்தியின் மகன் கந்த ஞானியார் 1995 முதல்

அன்பர்

Dr.இளங்கோஞானியார்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 3

இணைப்பு 3 இல் தரப்பட்டுள்ள சாதனத்தின் படி அராலி மேற்கு மேலாம், சாட்குனியமூர்த்தி ஞானியார் சந்நிதானத்தில் தென் அரைப் பாகத்திற்கும் அறங்காவலராக இப் பரம்பரையில் வந்த மூத்த புதல்வர்கள் செயற்பட்டு வந்தனர் அவர்கள் விபரம் பின்வருமாறு...

1வது அறங்காவலர் நடராசா கந்தஞானியார்

2வது அறங்காவலர் 1வது அறங்காவலரின் மகன்
கந்தஞானியார் நடராசா (விதானையார் )

3வது அறங்காவலர் 2வது அறங்காவலர் மகன்
நடராசா கந்தஞானியார் (தபால் அதிபர் )

4வது அறங்காவலர் 3வது அறங்காவலர் மகன் கந்த ஞானியார்
நடராசா (அதிபர் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோன்மணி சக்திஅம்மன் ஆலய வரலாறு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மூளாயத் தம்பர் ( விஸ்வநாதர்) என்னும் பெரியாரும் அவருடைய சகோதரி ஆச்சியாவும் வாழ்ந்து வந்தனர்.

மூளாய்த்தம்பரின் பிள்ளைகள் மூத்த மகன் தத்துவச் சிவஞானப்பா ( பெரியப்பர்) இரண்டாவது மகன் சாட்குண்ணிய மூர்த்தி ( சின்னப்பர் ) மூன்றாவது மகன் மனோன்மணி சிவம் ( செல்லர் ) இரு சகோதரிகளான கிரியா சக்தி, ஞானசக்தி ஆவார்கள் இவருடைய பெண்களில் ஒருவருக்கு வைரமுத்து என்பவரைத் திருமணம் செய்து வைத்தார்கள்

மூளாய் மத்தியில் அம்மன் கோயில் இருக்கும் காணியை சகோதரிக்கு சீதனமாக எழுதிக் கொடுத்து விட்டு சகோதரர்கள் வரும் போது ஐயனாரை வணங்கி விட்டு காட்டு வீதி வழியே வந்தார்கள். மூளாய் தெற்கிலிருக்கும் ஐயனார் கோயிலுக்கும் மூளாய் அம்மன் கோயிலுக்கும் தொடர்பு இருக்கிறது.


வரும் வழியில் இவர்களுக்குப் பின்னால் ஒரு கிழவி வந்து கொண்டிருப்பது போலத் தோற்றம் தெரிந்தது. மூன்றாவது மகனான செல்லருகே அந்தக் காட்சி கூடுதலாகத் தென்பட்டது.

அராலி மேற்கில் ஞானியார் சந்நிதானத்தின் வடக்குப் பக்கத்தில் தற்போது அம்மன் ஆலயம் இருக்கும் காணியில் தான் செல்லருடைய வீடு இருந்தது.

அன்று இரவு செல்லரின் கனவில் அம்மன் வந்து நான் இங்கு தாவாரத்தில் (தாழ்வாரம்) இருக்கின்றேன் நீ உங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய உட் தோற்றம்



மனோன்மணி சக்தி அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநாயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திருக்கிறியோ" என்று கேட்பது போல இருந்தது! விடிந்தது அவர் போய் பார்க்க வேப்பமரத்தடியில் தேசிக்காய் ஒன்று காணப்பட்டது அவர் அந்த இடத்தில் சிறு கொட்டில் அமைத்து விளக்கு வைத்து வணங்கி வந்தார். செல்லருக்கு ஐந்து ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தார்கள் இவருடைய பிள்ளைகளில் இரண்டாவது மகனான பஞ்சாட்சரமூர்த்தியின் மூத்த மகளாக திருமதி செம்மனஞ் செல்வி கணபதிப்பிள்ளை அவர்களால் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீமெந்தினால் சிறியகோயில் கட்டி மேடை அமைத்து மேடையில் விளக்கு வைத்து அம்மனை வணங்கினார்கள். மார்கழியில் திருவெம்பாவை எட்டாம் நாளும் பொங்கல் படையல் செய்வார்கள் கற்பூர தீபத்தை வெற்றிலையால் அணைத்து அந்த வெற்றிலையை கண்களில் எல்லா அடியவரும் ஒற்றி வணங்குவார்கள்

செல்லரின் இளைய மகனான திருவாதவூரர் கோயிலுக்கு விளக்கு வைத்து வணங்கி வரும் காலத்தில் அவருடைய தமையனான திருஞான சம்பந்தருடைய மனைவியார் தனது கணவர் இறந்த பின்பு தாலியை அம்மனுக்கு கொண்டு வந்து கொடுத்தார்

திருவாதவூரர் 20 ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தாலியை கொடுத்து அம்மனுக்கு சில்வரில் முகமும் நிறைகுடமும் செய்து வைத்து வணங்கினார் இவர் இறந்த பின்பு இவருடைய சகோதரியின் பேரப்பிள்ளைகள் அம்மனுக்கு விளக்கு வைத்தார்கள் ஒவ்வொரு நாளும் காலையில் பட்டு கட்டி பூக்கள் வைத்து விளக்குகள் ஏற்றி வணங்குவார்கள் அம்மன் கோயிலை பராமரிப்பதற்கு மனோன்மணிசிவத்தின் மகன் பரலோகத்தின் மகன் ஞான சுந்தரம் ஊரத்தியில் 16 பரப்பு நெற் காணி கொடுத்தார். திருஞானசம்பந்தருடைய மகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயேந்திரம் 8 பரப்பு நெற்காணியும் கொடுத்துள்ளார்கள். மனோன்மணிசிவத்தின் மகளின் பேரப்பிள்ளைகளால் 20 நூற்றாண்டின் பிற்பகுதியில் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

நவராத்திரி, திருவெம்பாவை தினங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறும் நவராத்திரியில் ஒரு நாள் அயலவர்கள் எல்லோரும் சேர்ந்து விசேடமாகப் பொங்கல் படையல் பூசை நடைபெறும் கன்னிப்பெண்கள் அம்மனிடம் நேர்த்தி வைத்து பலன்கள் பெற்றிருக்கின்றார்கள்

திருஞான சம்பந்தருடைய மகன் விஜயேந்திரம் ஆவார், விஜயேந்திரம் மகனான சிவஞான மூர்த்தி என்பவர் மலேசியாவில் இருந்து வந்து 2012 கோயிலை புனருத்தாரணம் செய்தார் இவருடைய தாயார் கனவில் வந்து தோற்றமளித்து தான் ஊரில் இருப்பதாகவும் தன்னை வந்து பார்க்கும் படி கூறியதாகவும் சொன்னார்.

அம்மனுக்கு ஒரு பக்கத்தில் பிள்ளையார் சிலையும் மறுபக்கத்தில் முருகன் சிலையும் வைத்து கோயிலை புனருத்தாரணம் செய்து 2013ம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஒவ்வொரு வருடமும் சதய நட்சத்திரத்தில் கும்பாபிஷேக தினத்தன்று சங்காபிஷேகம் நடைபெற்று அம்மன் கும்பநீர் புதிதாக மாற்றப்பட்டு விஷேஷ வழிபாடுகளும் இடம் பெறுகின்றது. வருகின்றது. அடியவர்கள் நேர்த்திக்கடன் செலுத்தி வருகின்றனர். கும்ப நாயகியாக வீற்றிருந்து மனோன்மணி சக்தி அம்மன் பக்தர்களுக்கு அருளாட்சி செய்து வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரன் பிறிண்டேர்ஸ், நீராவியடி யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org